19 வது வருடத்தில்

விளம்பரம்™


VLAMBARAM™

☎ 416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

416-282-4978

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்



தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338
416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

Dr. Iru Vijayanathan



குடும்ப பல்வைத்தியர்

416-264-3232

3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்

நதி 19 பாலம் 04 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 15, 2009

# அமெரிக்க செனற் சபையில் இலங்கை விவகாரம்

இலங்கை விவகாரம் பற்றி அமெரிக்கா வெளிவிவகார செனட் சபை ஆராய முடிவு.

அமெரிக்காவின் வெளிவிவகாரங்களுக்கு பொறுப்பான செனட் சபை இலங்கை விவகாரங்கள் தொடர்பாக எதிர்வரும் 24 ஆம் நாள் கூடி ஆராய உள்ளதாக அதன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: இலங்கையின் தற்போதைய நிலமை தொடர்பாக அமெரிக்காவின் வெளிவிவகாரங்களுக்கு பொறுப்பான செனட் சபை எதிர்வரும் 24 ஆம் நாள் கூடி ஆராய உள்ளது. இந்த கூட்டத்திற்கு வெளிவிவகார குழுவின் தலைவர் செனட்டர் கெரி தலைமை வகிப்பார். இந்த கூட்டத்தில் சிறிலங்காவுக்கான முன்னாள் அமெரிக்கா தூதுவர் ஜெப்ஃ.ரி லுன்ஸ்ராட், மனித உரிமை கண்காணிப்பகத்தைச் சேர்ந்த அன்னா நெஸ்ராற், ஊடகவியலாளர் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த பொப் டைற்ஸ் ஆகியோர் பங்குபற்ற உள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்காப் படையினரால் அண்மைய நாட்களில் 190 ஆண்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 130 இளம் பெண்கள் படையினரின் பாலியல் வல்லுறவுக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து கருத்துரைக்கும் போது:- வன்னியில் சிறீலங்காப் படையினரால் ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்குள் அகப்படும் தமிழர்கள் விசுவமடுப் பகுதியில் அமைந்துள்ள இடைத் தங்கல் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே, இளைஞர்கள் ஒரு பகுதியிலும், யுவதிகள் ஒரு பகுதியிலும், ஏனைய தமிழர்கள் இன்னொரு பகுதியாகவும் பிரிக்கப்படுகின்றனர்.

இங்கே வகைப்படுத்தப்படும் இளைஞர்கள் பிறிதொரு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே கொடூர வதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்படுகின்றனர். பின்னர் சாகடிக்கப்படும் உடல்கள் அங்கிருந்து அனுராத புரத்திற்கு கொண்டுசென்று புதைக்கப்படுகின்றனர். இவ்வாறு அண்மைய நரட்களில் 190 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோன்று வகைப்படுத்தப்படும் இளம் யுவதிகள் சிறீலங்காப் படையினரின் பாலியல் வல்லுறவுக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட சம்பவங்களை கருத்திற்கொண்டு இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வருகின்ற தமிழர்களின் பாதுகாப்புத் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி அனைத்துலக கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் யூகோசிலாவியாவில் இடம் பெற்றவை போன்று சிறீலங்காவிலும் பாரிய மனித அழிவுகள் இடம்பெறும் அபாயம் உள்ளது.

1995 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் பல இளைஞர்கள் யுவதிகள் படுகொலை செய்யப்பட்டு பின்னர் செம்மணி வெளியில் புதைக்கப்பட்டமை அனைவருக்கும் வெளிச்சமாகியது.



செம்மணியில் படுகொலைகள் மற்றும் பாலியல் வல்லுறவுப் படுகொலைகள் ஆதாரத்துடன் உறுதி செய்யப்பட்ட போதும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் சிறீலங்கா அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கது' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேசமயம் சிறிலங்கா படையினரின் எறிகணைத் தாக்குதலில் புலம்பெயர் வாழ் தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான புண்ணியமூர்த்தி சத்தியமூத்தி சிறிலங்க பாதுகாப்பு வலயத்தினுள் மரணமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தேவிபுரத்தில் சிறிலங்கா படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தாயகத்தில் இருந்து தாயகத்து நிலைமைகளை புலம்பெயர் ஊடகங்களுக்கு தொலைக்காட்சிகள் வழியாகவும் வானொலிகள் வழியாகவும் அச்சு ஊடகங்கள் வழியாகவும் இணைய ஊடகங்கள் வழியாகவும் வெளியிட்டு வந்தவர் சத்தியமூர்த்தி ஆவார்.

வன்னியில் உள்ள ஊடக இல்லத்தில் இருந்து ஊடகப் பணியை ஆற்றி வந்த இவர், யாழ். மண்டைதீவை தாய் மண்ணாகக் கொண்டவர்.

மட்டக்களப்பு பொலன்னறுவ மன்னம்பிட்டியில் நீண்டகாலம் வாழ்விடமாகக் கொண்ட இவர், ஒரு பிள்ளையின் தந்தையும் ஆவார்.

### உலகசமூகத்திற்கு தமிழினத்தின் சார்பில் முருகதாசின் வேண்டுகோள்!



"சிறிலங்கா அரசினால் நடத்தப்படும் தமிழின அழிப்பை அனைத்துலக சமூகம் தடுத்து நிறுத்தக்கோரி சுவிற்சிலாந்தில் அமைந்துள்ள ஐக்கியநாடுகள் சபையின் தலைமைப் பணிமனையின் முன்னால் ஈழத்தமிழன் முருகதாசன் மரணசாசனமாக ஏழுபக்க கடிதம் எழுதிவைத்து விட்டு தீக்குளித்துள்ளார். அவரது மரணசாசனத்தில் "போர் தொடர்பான நடைமுறைகளான ஜெனீவா பிரகடனம், அடிப்படை மனித உரிமைகள், இனஅழிப்பை தடுப்பதற்கான சட்டங்கள் எல்லாவற்றையும் ஐ.நா. மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்கள் வைத்திருந்தும் அதன் உறுப்பு நாடான இலங்கை இவற்றை எல்லாம் மீறி எனது தமிழினத்தை ஒட்டுமொத்தமாக படுகொலை செய்து கொண்டிருக்கிறது. அதனை நீங்கள் எவரும் தடுத்து நிறுத்தவில்லை. பார்த்துக்கொண்டு ஊக்கம் கொடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள்" என்று எழுதி வைத்துள்ளார்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

துரித பணமாற்றுச் சேவை


- 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

416.267.8221



REALTY EXECUTIVES

Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Office: 905-209-7500
Fax: 905-209-7501

Realty Executives GTA Ltd. Brokerage
Executive Mortgage Inc.
HSBC Tower, Liberty Square
3601 Highway 7 East, Suite 1005
Markham ON L3R 0M3
Each office is independently owned and operated.

STANDARD MORTGAGES INC



ANANDA, M.Com, CA
Mortgage Specialist / Financial Consultant
Direct: 416-319-2520

Reliance
Financial & Investment Co Inc

MORTGAGES
▸ Residential ▸ Commercial ▸ Line of Credit
▸ Low Interest ▸ 40 Lenders ▸ Pre-approval
▸ Re-finance ▸ Debt Consolidation
▸ Bad or No Credit OK ▸ Self-employed OK
▸ New Immigrant OK ▸ Private Funds also OK

We GET YOU MORTGAGE even if Banks say 'No'

INSURANCE
▸ All Insurance Companies ▸ Life ▸ Critical illness ▸ Disability ▸ Health & Dental ▸ Travel ▸ Visitors ▸ Mortgage

RESP ▸ Govt. grants ▸ Highest scholarships paid ▸ Flexible

RRSP ▸ Excellent growth ▸ Reduced taxes ▸ Investment loans

Don't miss our FREE SEMINAR on RRSP & REDUCING TAXES

Email: reliancefico@ymail.com, Fax: 647-342-2399

SATHYA SAIRAM DRIVING SCHOOL



- உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
- பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
- உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?

அழையுங்கள் - 416-831-5217

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!



Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

CENTUM™
Veedu Mortgages Inc.






Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969

HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd.
Suite #206
Scarborough, ON
M1S 2Y3
*Independently Owned and Operated



கதிர்

GTA Square
SOLD OUT !
Last 7 Units Available
Middlefield & Finch



Don't Miss Out

24hr. 416.856.6900
Office: 416.321.6969
Email: kathirs@rogers.com
Call me for a change
Kathir S. Kathirkamanathan P.Eng.
Sales Representative

HomeLife/GTA Realty Inc., Brokerage
1711 McCowan Rd., #206, Toronto
Independently owned & operated

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு
Real Estate Broker




Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# பேரண்டக் கதை


கோள்களின் இயக்கங்களுக்கான கெப்பினரின் மூன்று விதிகளையும் பார்ப்போம்.

**விதி I.** வானப்பரப்பில் கோள்கள் எல்லாம் கதிரவனைக் குவியமாகக் கொண்ட ஒரு நீள் வளையப் பாதையில், கதிரவனை வலம் வருகின்றன.




**விதி II** - கோள்கள் கதிரவனை வலம் வருகையில், கதிரவனையும், கோளையும் இணைக்கும் கோடானது சமநேர இடைவெளிகளில் சம அளவிலான பரப்புகளைக் கடக்கும்.

கோள் ஒன்றின் ஒரே நேர இடைவெளிகளில்



## பிரபஞ்சம் - 33

ஆன நிலைகள் A - B, C - D என்போம். S என்பது கதிரவனின் நிலை. இப்படியாக இருப்பின் கோடிட்ட பரப்புகள் SAB யும் SCD யும் ஒரே அளவினதாக இருக்கும் என்பதே கெப்பினரின் இரண்டாவது விதி கூறுவதாகும்.

இதன்படியே, இது சரியாக அமைவதற்கு நீள்வளையப்பாதையில் இயங்கும் கோள் கதிரவனுக்கு அண்மையில் வருகையில் கதி கூடியதாகவும், கதிரவனுக்கு தூரமாக வருகையில் கதி குறைந்தாகவும் இருக்கும் என்பது வெளிப்படையான உண்மை.


மூன்றாவது விதியினைப் பார்ப்பதற்கு முன்னராக, இவ்விரண்டு விதிகளும் வானியலில் ஏற்படுத்திய மாற்றங்களைப் பார்ப்போம். முதலாவதாக, கொப்பநிக்கசின் கதிரவன் மையப் பேரண்ட மாதிரியைச் சரியானது என ஏற்றுக்கொள்ள வைத்த கணித வடிவ நிறுவலாகும் இவ்விரண்டும். அத்துடன் கோள்கள் எல்லாம் வட்டப்பாதையில் தான் இயங்கிக் கொண்டு வருகின்றன எனக் காலாதிகாலமாகக் கொண்டிருந்த நம்பிக்கையானது தகர்க்கப்பட்டது. மூன்றாவதாக, கோள்கள் தத்தமது பாதையில் சீராக (கதியினை மாற்றாது) இயங்குகின்றன என்பது பொய்ப்பிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக, மிக முக்கியமாக, கோள்கள் எல்லாம் ஏதோ ஒரு பேரண்டப்பொறியின் செயற்பாடு காரணமாக, கோள் ஓடுகளின் அசைவினால் தான் இயங்குகின்றன என்ற கருத்தும் பிழையானது என்பது காண்பிக்கப்பட்டது. கெப்பினர் கூட ஆரம்பகாலங்களில் இந்தப் பேரண்டப் பொறியில் நம்பிக்கை கொண்டவராக இருந்திருந்தார் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்தக் கணித வடிவ நிறுவலின் பின்னராக அதனை கெப்பினர் கைவிட்டு விட்டார்.

சரி, கோள்களின் இயக்கங்களுக்கு பேரண்டப் பொறிவிசை காரணமில்லை என்றால், அவை எவ்விதம் இயங்குகின்றன என்ற கேள்வி கெப்பினரிடம் கேட்கப்பட்ட போது, துணிகரமான பதிலொன்று கெப்பினரிடம் இருந்து உடனே வந்தது. கோள்களின் நீள்வளையப் பாதையிலான இயக்கத்திற்கான இயங்கு சக்தியை கதிரவனே ஏதோ ஒரு விதமாக வழங்குகின்றது. சந்திரனின் பூமியைச் சுற்றிவரும் இயக்கத்திற்கும் பூமியே அந்த இயங்கு சக்தியைக் கொடுக்கின்றது' என்றார் கெப்பினர். இதுவே ஈர்ப்பு பற்றிய முதல் விளக்கம் என்பேன். இக்கூற்றானது நியூட்டனின் ஈர்ப்பு விதிக்காயினும் சரி, அயன்ஸ்ரைனின் பொதுச் சார்புத் தத்துவத்திற்காயினும் சரி, மிகப் பொருத்தமாக உள்ளது. எனவே ஈர்ப்புப் பற்றிய சிந்தனையை சரியான முறையில் உலகிற்குத் தந்தவர் கெப்பினர்தான் என்பது எனது உறுதியான கருத்தாகும்.


**விதி III** - கோள் ஒன்றின், ஒரு பூரண சுழற்சிக் காலத்தின் வர்க்கமானது, கதிரவனில் இருந்துள்ள அக்கோளின் சராசரித் தூரத்தின் கனத்திற்கு நேர்விகிதமானது. கெப்பினரின் கணிதத் திறமையினைக் காட்டும் இந்த விதியானது பிற்காலத்தில் வானவியலாளர்களினால் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. வானியல் அறிவானது வளர்ச்சியுற, கெப்பினரின் மூன்றாம் விதியானது, பேரண்டத்தின் எல்லா இடங்களிலும் எல்லாப் பொருட்களுக்கும் பொருத்தக்கூடியதாகப் பொதுமைப்படுத்தப் பட்டது. அதன்படி, கெப்பினரின் மூன்றாம் விதியானது பின்வருமாறு மெருகூட்டப்பட்டது.

'கோள் ஒன்றின், ஒரு பூரண சுழற்சிக் காலத்தின் வர்க்கமானது, அக்கோள் சுற்றும் நீள்வளையப் பாதையின் பேரச்சின் அரைப்பங்கின் கனத்திற்கு நேர்விகிதமானது'.

இதனை விளங்கிக்கொள்வதற்கு, நீள் வளையத்தின் இயல்புகள் பற்றியும் சிறிது தெரிந்திருக்க வேண்டும். கீழே உள்ள படங்கள் அவற்றினை விளக்கும்.




AB - பேரச்சு CD - சிற்றச்சு
S,S' - குவியங்கள்




பூரண சுழற்சிக்காலம் T எனின் $T^2 \propto a^3$



**- கனி -**

# உள்ளம் பெருங்கோயில்

அன்பே வடிவான இறைவனுக்கு மிகமிக அருகில் பக்தன் சென்று விடுகிறான். ஞானம், பக்தி, யோகம் என்ற மூன்றும் இறையுடன் இணைவதே நல்ல பண்பு. ஒன்றை என்றும் நினைவு கொள்ள வேண்டும் இந்த ஆன்மா பல்வேறு விஞ்ஞானங்களாலோ, கூர்ந்த அறிவாலோ வேதங்களைக் கரைத்துக் குடிப்பதாலோ இறைவனை அடையப்படுவதில்லை. ஆன்மா யாரை விரும்புகிறதோ அவரை அவராலேயே அது அடையப்படுகிறது. யார் அதிக நேசமுடையவரோ அவரை பரமாத்மா விரும்புகிறார். 'உள்ளமே கோயில் உடம்பே ஆலயம்'. எல்லாம் ஈசன் செயல் என்று வாழும் ஞானவாழ்வு வாழ்ந்தவர் பூசலார். ஓர் அந்தணர் திரு நின்ற ஊரில் வாழ்ந்தவர். ஓர் ஏழை. ஆனால் ஒரு நல்ல சிவபக்தர். பக்தி சிரத்தையோடு திருப்பணிகள் செய்ய மனம் கொண்டவர். சிவனுக்கு ஒருகோயில் கட்ட விரும்பினார். பணம் இல்லை, கை கொடுக்க யாரும் இல்லை. ஆடி ஓடிப்பார்த்தார் கிடைக்கவில்லை. அதுவும் பெருமான் சோதனை தான். சோதனை இல்லாத சாதனையில் என்ன பெருமை இருக்கிறது. நாட்டுப்பெருமை பேசுவோர் பலர். தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து என்பது பொன்மொழி. சோதனைகள் பலருக்கு வேதனையில் முடிகிறது. சிலருக்குச் சாதனையில் முடிகிறது. இருந்த இடத்தில் இருந்தபடியே மனத்தால் ஒருகோயில் கட்ட முடிவு செய்தார் பூசலார். திருப்பணிகள் செய்ய தொடங்கினார். காணிநிலம் வேண்டுமே. மாபெரும் நிலப் பரப்பை மனத்தாலேயே



வாங்கினார். காணிக்குள் கிடந்த வேண்டாத குப்பைகளை தினம் தினம் துப்பரவு செய்து வந்தார். குறித்த நாளும் வந்தது. திருப்பணி செய்யத் தொடங்கினார். ஆளும் பேரும் மனத்துளே ஒரு கருங்கல் கோயில், ஆறு மண்டபங்களும், அதுமட்டுமல்ல ஒரு இராஜ கோபுரமும் ஆகாயத்தை தொடும். ஆண்டுகள் நகர்ந்தன. ஆண்டுகள் போகப்போக, முதுமையும் வரவர மரணமும் நெருங்குமோ என்கிற பயம் தலை தூக்கியது. எதற்கும் தலைமை தச்சரை அழைத்தார். தன் கவலையை தெரிவித்தார். அவரும் ஒரு உன்னதமான சிற்பி. இரவு பகல் என்று பாராது, வேலையை செய்து திருப்பணியை சீக்கிரம் முடித்து தருவதாக வாக்களித்தார். வாக்களித்தபடியே திருப்பணியும் நிறைவடைந்தது. கும்பாபிஷேகம் செய்ய நாளும் நேரமும் ஆகம அறிஞர் துணையோடு குறித்துக் கொண்டார். எல்லாம் மனம்தானே. கைலாசம் சிவனுக்கு இருக்க கஷ்டமானால் இங்கேயே இருக்கக் கூடிய, சொல்ல முடியாத அழகான கோயில். அதேகால கட்டத்தில் காஞ்சிபுரத்தில் கல்லால் ஒரு கலைக்கோயிலை கட்டிக்கொண்டு இருந்தான் பல்லவ மன்னன். ஓர் அற்புதமான ஆலயம் உருவானது. ஒரேநாள் ஒரே நேரத்தில் இரண்டு இடத்திலும் கும்பாபிஷேகம். இறைவனுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. பூசலார் மேன்மையை உலகம் விளங்கிக் கொள்ளும் பொருட்டாக இருக்கலாம். சிவபெருமான் மன்னனுக்கு கனவில் தோன்றி ஆலய குடமுழுக்கை மாற்றி மற்றொரு நாள் நடத்தும்படி மன்னனுக்கு கட்டளை இட்டார். நாளை திரு நின்ற ஊரில் வாழும் பூசலார் என்ற என் அன்பர் கட்டிய ஆலயத்தில் நாம் எழுந்தருளுவதால் நீ எடுத்த திருக்கோவிலுக்கு நம்மால் வர இயலாது என்ற விடயத்தையும் கூறிவிட்டார். மன்னரும் பணிந்து வணங்கி இறைவன் ஆணையை ஏற்று குடமுழுக்கைத் தள்ளிவைத்து தானும் படை, குடி, அமைச்சரோடு திரு நின்ற ஊர் புறப்பட்டார். பூசலாரை தேடிக்கண்டுகொண்டார். குடமுழுக்கு காண வந்தேன் என்று விபரங்களை மன்னர் கூறினார். பூசலாரின் கண்களில் இருந்து நீர் பொல பொல என்று சொரிந்தது. தன் இதயத்தில் கட்டிய கற்கோவிலைப் பற்றி மன்னனுக்கு உரைத்தார்.

ஊன விழிகளை திறந்து வைத்து அந்த உன்னதமான கோவிலை காண முடியாது என்று உணர்ந்த மன்னன் தன் விழிகளின் இமைகளை இழுத்து மூடினான். மனக்கண் திறந்தது. பூசலார் கட்டிய பொற்கோவில் தெரிந்தது. இலட்சோப லட்சம் மனிதரும் தேவரும் சித்தரும் வந்து கும்பாபிஷேகத்தை காண நிற்பது மனத்திரையில் விரிந்தது. மங்கள இசை முழங்க, சிவசிவா என்ற மங்கள ஓசை, வணங்கும் அழகு புரிந்தது. கண்களை திறந்தான் பல்லவ மன்னன். பூசலாரின் புனித விழிகளில் கண்ணீர் கங்கை கரைபுரண்ட காட்சியை கண்டு கைதொழுதான்.

தொடர்ச்சி 03ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

**Sales Reps. Welcome**
For All your Real Estate & Investments Needs!
**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED




**HomeLife GTA Realty Inc.** Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**

# குருவும் சீடர்களும்

மாதா பிதா குரு தெய்வம் என்றார்கள். இன்றைய ஆராய்ச்சிகளின் படி மறு பிறவி இல்லை என அழுத்திக் கூறுகிறார்கள் பல அறிஞர்கள். மறுபிறவி உண்டென்பது என தாழ்மையான அபிப்பிராயம். முன் செய்த புண்ணியத்தால் தான் இப்பிறவியை ஓரளவு நன்றாக அமைந்ததாக நான் எண்ணுகின்றேன்.

ஒருவருக்கு மாதா பிதா குரு நன்றாக அமைந்து விட்டால் ஓரளவுக்கு நல்ல வாழ்க்கை அமையும் என்பதை மறுக்க முடியாது. இதோ என் கதை. (ஊரும் பேரும் குறிப்பிடவில்லை)

சாதாரண சிறு கிராமம். தென்மராட்சியில் உள்ள கிராமம். அப்பா நன்றாக உழைத்தார். எப்படியோ செலவாயிற்று. அம்மாவுக்கும் காசு சேர்த்து வைக்கத் தெரியவில்லை. வறுமை வாட்டியது, வதைத்தது. வாழ்க்கை கசந்தது. பசி பட்டினி. இதே காலத்தில் இரண்டாவது உலகப் போர். அதனாலும் உணவுத் தட்டுப்பாடு. மூன்று அக்காமார், இரண்டு தம்பிமார். அக்காமார் ஆறாம் வகுப்புடன் வீட்டில் தங்கி விட்டார்கள். வயதுக்கு வந்த பின் வெளியே அனுப்பக் கூடாது என்பது அன்றைய எமது கிராம மக்களின் எண்ணம்.

நானமூன்றாவது பெண்தான். நான் ஏதோ முரண்டு பிடித்து அழுது பள்ளிக்கூடம் போனேன். அந்தப்பாடசாலையில் எட்டாம் வகுப்பு மட்டுமே இருந்தது. எட்டாம் வகுப்புடன் வீட்டிலே தங்க வேண்டியதாயிற்று. இதற்கிடையில் அக்காமார் இருவருக்கும் கல்யாணமாகி விட்டது. ஏதோ பகல் முழுவதும் வேலை. இரவு தூக்கம். இப்படியே நாட்கள் கழிய யாரோ ஒருவருக்கு மனைவியாகி வாழ்வதா? எங்கள் வறுமை நிலையில் எனக்கு ஒரு மகாராசன் வரமாட்டான் என்பது தெரியும். இப்படியே இரண்டு வருடங்கள் மெல்ல நகர்ந்து விட்டது. என் தாயும் தகப்பனும் மகி நல்லவர்கள்தான். வறுமையை போக்கி வளமாக வாழ முடியவில்லை. அப்பாவும் முதுமையடைய தொடங்கிவிட்டார்.

அன்று எனது வாழ்வில் பொன்னான நாள், புதுமையான நாள். ஓர் ஆசிரியர் அவர் எங்கள் சொந்தம் தான். நாங்கள் சைவசமயம். அவர் கத்தோலிக்கர். அவர் எங்கள் வீட்டுக்கு வந்தார். நான் படித்த பாடசாலையில் பத்தாம் வகுப்பு தொடங்கப் போவதாகவும் என்னையும் வகுப்புக்கு வருமாறும் கேட்டார். முதலில் எனது அப்பா அம்மா சம்மதிக்கவில்லை.

அவர் எவ்வளவோ எடுத்துச் சொன்னார். படிப்பின் அருமையை கூறினார். பெண்களுக்கு படிப்பு அவசியம் என்றார். நாளைக்கே மகளை பள்ளிக்கூட்டம் அனுப்புங்கள் என்றார். கடைசியில் என் பெற்றார் சம்மதித்தனர். என்னிடம் மூன்று சட்டைகளே இருந்தன. அதில் ஒன்றை தோய்த்து உலரவிட்டு மடித்து தலையணையின் கீழ் வைத்தேன். அடுத்த நாள் அந்த சட்டையை அணிந்தேன். மைதொட்டு எழுதும் பேனா, மைக்கூடு, இரண்டு கொப்பிகளுடன் பள்ளிக்கூடம் போனேன். அங்கே இரண்டு பையன்கள் இரண்டு பெண்கள். அவர்களும் சாதாரணமானவர்கள் தான். எங்கள் குரு - அவர் முகத்தில் மகிழ்ச்சி. படிப்பு தொடர்ந்தது. பழைய புத்தகங்கள், சில புதிய புத்தகங்கள். நாங்கள் ஐவரும் அந்த வகுப்புக்குரிய வயதுடையவர்கள் அல்ல. பதினெட்டு வயதுக்கு மேல் பள்ளிக்கூடத்தில் படிக்க முடியாது என்பது அன்றைய கல்வித் திணைக்களத்தின் சட்டம். எனவே மிக கஷ்டப்பட்டு படித்தோம். ஒரு பையன் மட்டும் வயதில் குறைந்தவன். காலை எட்டுமணி தொடங்கி மாலை மூன்று மணி மட்டும் பாட-சாலை நேரம்.

**டிசெம்பர் 15, 2008 இல் அ. முத்துலிங்கம் எழுதிய ‘குருவும் சீடர்களும்” கட்டுரையைத் தொடர்ந்து பலர் தமது ஆக்கங்களை வெளியிட்டு வருகிறார்கள்.**

மத்தியான உணவு கிடையாது. எங்கள் ஆசிரியர் எங்களுக்கு பாணும் பாலும் தருவார். இலவசமாக போசாக்கற்ற குழந்தைகளுக்காக ஏதோ ஒரு நாடு இலவசமாக கொடுத்த பால்மா. அதில் எங்களுக்கும் கிடைத்தது. எங்கள் ஆசிரியர் அந்த பால் விநியோகத்துக்கு பொறுப்பாயிருந்தார். ஏழைக் கர்ப்பிணிகளுக்கும் அந்தப் பால் கொடுக்கப்படும். அந்தப் பாலில் மாணவர்களான எங்கள் ஐவர்க்கும் பங்கு. பால் வார்த்து படிக்க வைத்த குரு ஆசிரியர்.

அந்தக்காலத்தில் ஆவணியில் பத்தாம் வகுப்பு சோதனை. அரசாங்க சோதனை நடக்கும். நாட்டுப்பற்று ஊர்ப்பற்று மொழிப்பற்று அவர் எங்கள் படிப்பில் காட்டிய அக்கறை எல்லையற்றது. இரவில் நான் படிக்கின்றேனா என்று பார்ப்பதற்காக என் வீட்டுக்கே வந்து பார்ப்பார். என் இளைய சகோதரனுக்கு ஐந்தாம் வகுப்பு ஸ்கொலர்ஷிப் கிடைக்க வழி செய்தார். என் தம்பி கிராமப் பாடசாலையை விட்டு நகரப்பாடசாலைக்கு சென்று படித்தபோது மிக மகிழ்ச்சி. அவரும் படித்து உயர்நிலைக்கு வர வழி செய்தார்.

தை மாதம் வகுப்பில் சேர்ந்த நாங்கள் சரியாக எட்டுமாதங்களின் பின் ஆவணி மாதம் பரீட்சை எழுதினோம். இரண்டு வருடப்படிப்பை எட்டு மாதத்தில் படிக்க முடியுமா? படித்தோம், பரீட்சை எழுதினோம். நால்வர் தேறினோம். ஒரு பெண் தோல்வியுற்றாள்.நானும் இன்னொரு பெண்ணும் திறமைச் சித்தி. யாரும் நம்ப முடியாது தான். எங்கள் குருவின் வழி காட்டலே காரணம்.

நால்வரில் மூவரும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு சென்றோம். பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆனோம். வாழ்க்கை மாறியது. சீதனம் கேட்காத தன்னம்பிக்கையுள்ள கணவர் கிடைத்தார். ஒற்றுமையாக சந்தோஷமாக இருந்தோம். இரண்டு குழந்தைகள். அவர்கள் படித்தார்கள். பட்டம் பெற்றார்கள். இருவருக்கும் இரண்டு வீடுகள் கட்டினோம்.

அப்புறம் அமைதியான சந்தோஷமான வாழ்வில் அரசியல் பிரச்சினை - இராணுவத்தின் ஆக்கிரமிப்பு அட்டகாசம். பிள்ளைகள் வெளியேறினர். சொந்த மண் கண் என இருந்தும் இருக்க முடியவில்லை. பிள்ளைகளிடம் வரவேண்டியதாயிற்று. சொந்த மண்ணைப்பிரிந்த கவலையை விட பெரிய கவலை எனக்கில்லை. ஓய்வூதியம் உண்டு. யார் உழைப்பும் எனக்கு தேவையில்லை.

ஏன் இதை கூறுகிறேன். ஒரு நல்ல குருவும் முன்னேற வேண்டும் என்ற பெற்றாருமே காரணம். படிப்பு இல்லாவிட்டால் படியேற முடியாது. இன்றைய குழந்தைகள் நம் மண்ணில் அதுவும் தென்மராட்சி பகுதி குழந்தைகளின் படிப்பு பாழாகிறது. பணம் உள்ள பெற்றார் நகரப் பள்ளிக்கூடங்களுக்கு பிள்ளைகளை அனுப்புகிறார்கள். தென்மராட்சி, மிருசுவில் பக்கம் உள்ள சில பாடசாலைகள் மூடப்பட்டு விட்டன. என்ன செய்வது கிளிநொச்சி வாழ் குழந்தைகளின் நிலை வயிற்றெரிச்சல்.

எது எப்படி இருப்பினும் நம்குழந்தைகள் படிக்க வேண்டும். உயர வேண்டும். அதற்கு எந்த இக்கட்டிலும் மாதா - பிதாவும் குருவும் காரணமாக இருக்க வேண்டும்.

என் குருவாய் வந்து வாய்த்து எனக்கு உயர வழி வகுத்த என் ஆசிரியரை நான் கூப்பி வணங்குகிறேன். ஏதோ நான் பெரிய ஆள் அல்ல என்றாலும் இருந்த இடத்தில் இருந்து உயர்த்தி விட்டவர். அவர் பெயர் ஞானப்பிரகாசம்.

# உள்ளம் பெருங்கோயில்

மனிதன் கோவிலுக்கு போவது தன்னை கோயிலாய் ஆக்கத்தான். சீவனை சிவனாக்குவதே வாழ்க்கையின் இலட்சியம்.

**கந்தையா சண்முகம்**
**இளைப்பாறிய அதிபர்**

‘உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத்தெளிந்தார்க்கு சிவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே’

---திருமந்திரம்


## EMPLOYMENT & ENTREPRENEURIAL
### CAREER OPPORTUNITIES IN CREDIT MANAGEMENT



• Collections • Mediation • Marketing • Counselling
• Interpretation • Translation

Providing Opportunities for Newcomers, Community and Career Colleges
In Banking, Business, Accounts Receivable & Payable, Credit & Collections
Mentoring for Professional Designation with Credential Backgroud

**Samy Ramachandran**
Consultant
Personal and Financial Services

Member of:
• Credit Institute of Canada
• Credit Association of Toronto
• Credit Counseling Service of Toronto

**Information Sessions**
Employment Centres
Collection Departments and Agencies

**Dir: 416.760.2183**
**Fax: 416.296.0737**
**samy_consulting@hotmail.com**

• Education • Entrepreneurship • Employment

## APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# இருளின் பிடியில் எல்லாமே



சத்குரு ஜக்கி வாசுதேவ்

மஹாசிவராத்திரி திருநாள், எத்தனையோ வாய்ப்புகளின் வாசலாகத் திகழ்கிறது. ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு முந்தைய நாள் சிவராத்திரி. மாசி மாதத்தில் வரும் மஹா சிவராத்திரிதான் அந்த ஆண்டிலேயே மிகவும் இருண்ட இரவு. மஹாசிவராத்திரி கொண்டாட்டம் என்பது இருளைக் கொண்டாடுவதன் அடையாளம். தர்க்க ரீதியாக சிந்திக்கும் மனம் இருளை விரும்பாது, ஒளியையே விரும்பும். இருளை ஏன் கொண்டாடுகிறோம்? அதுவும் சிவனின் பெயரால் ஏன் கொண்டாடுகிறோம்? இந்தக் கேள்விகள் எழுவது இயற்கை.

தொடர்புகளுக்கு: 416.300.3010
website: www.ishafoundation.org
www.ishayoga.org

“ஷிவா” என்ற சொல்லுக்குப் பொருள் “எது இல்லையோ அது” என்பதுதான். இந்தப் பிரபஞ்சத்தின் எல்லாப் பக்கமும் பார்த்தால் படைப்பு பலவிதங்களில் நடைபெற்றிருப்பதை நீங்கள் காண்பீர்கள். பிரபஞ்சத்திலேயே மிகப்பெரிய இருப்பு எதுவென்று பார்த்தால், அது எங்கும் காணப்படும் பிரம்மாண்டமான வெற்றிடம் தான். மொத்தப் பிரபஞ்சத்திலும் பெரிதாகத் தெரிவது இந்த வெற்றிடம்தான். இந்த வெறுமையிலிருந்தே எல்லாம் தோன்றுகின்றன. இந்த வெறுமையில்தான் எல்லாம் ஒடுங்குகின்றன. இதை நவீன விஞ்ஞானமும் இன்று ஒப்புக்கொள்கிறது. இந்த பிரம்மாண்டமான வெற்றிடத்தைத்தான் “ஷிவா” என்று சொல்கிறோம்.

எல்லாச் சமயங்களுமே, பரம்பொருள் என்றால், அனைத்து இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பது என்றுதான் சொல்கின்றன. இந்த இருளும் வெறுமையும்தான் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்றன. தங்களுக்கு நலவாழ்வு வேண்டும் என்று நினைப்பவர்கள் ஒளியைப் புனிதம் என்று போற்றுவதுண்டு. நலவாழ்வைக் கடந்து ஆன்மீகத்தில் கரைந்து போவதற்கான நாட்டம் ஏற்படுமென்றால் அவர்கள் இருளையே புனிதமென்று போற்றுவார்கள்.

மனமுதிர்ச்சி இல்லாதவர்கள்தான், இருளை அச்சமூட்டும் தீயசக்திகளுக்கு உரியதென்று கருதுவார்கள். இருள் என்பது எங்கும் நிறைந்திருக்கும் தெய்வீகத்தின் குறியீடு. இருளுக்கு எவற்றின் உதவியும் தேவையில்லை. ஒளியை உருவாக்க வேண்டுமென்றால் அதற்கென்று ஒரு மூலம் தேவைப்படுகிறது. எரிந்து முடிந்தபின் அனைத்தும் போகிறது. ஒளியைப் பொறுத்தவரை அதற்குத் தொடக்கமும் முடிவும் உண்டு. ஆனால் இருள் எந்த மூலத்திலிருந்தும் வருவதில்லை. அதற்கு எல்லையும் இல்லை.

எனவே, இந்த பிரம்மாண்டமான வெற்றிடத்தையே “ஷிவா” என்று அழைக்கிறோம். இந்த வெற்றிடத்தின் பிடியிலிருந்துதான் எல்லாமே தோன்றியது. எனவே எல்லையில்லாத இருளின் பிடியில் உங்கள் குறுகிய எல்லைகளைக் கரைத்துவிடக்கொடுக்கப்பட்டிருக்கும் வாய்ப்புதான் மஹாசிவராத்திரி. மஹாசிவராத்திரியன்று கோள்களின் அமைப்புமுறை, மனித உடலில் உள்ள சக்தி இயல்பாகவே மேல்நோக்கிச் செல்வதற்கு வாய்ப்பாக அமைகிறது. அந்த நாளில் முதுகுத்தண்டினை நேராக வைத்திருக்கும்போது இயற்கை உங்கள் சக்தி நிலையை மேல்நோக்கிக் கொண்டு செல்கிறது. தன் சக்தி நிலையை மேல் நோக்கிக் கொண்டு செல்கிற போதுதான் மனிதன் தன் இயல்புகளின் உச்ச நிலையை அடைகிறான். இவ் உலகில் உள்ள படித்த மனிதர்கள் எல்லோருக்குமே ஐசக் நியூட்டன் புவியீர்ப்பு விசையை கண்டறிந்த கதை தெரியும். ஆப்பிள் பழம் கீழே விழுந்தது பற்றியே அனைவரும் பேசுகிறார்கள். ஆனால், செடியாக இருந்த அந்த ஆப்பிள் மரத்தை ஒரு சக்தி மேல் நோக்கி வளர்த்திருக்கிறதே அது குறித்து யாரும் பேசுவதில்லை. கீழ்நோக்கி இருக்கிற சக்தி பற்றிய சிந்தனைகளே இந்த மண்ணில் அதிகமாக வளர்ந்திருக்கின்றன. ஆத்ம சாதனை மேற்கொள்பவர்கள் தங்கள் சக்திநிலையை உச்சத்திற்குக் கொண்டு செல்ல இயலும். அதற்கு இயற்கையே உருவாக்கித் தரும் இணையற்ற வாய்ப்புதான் மஹாசிவராத்திரி.

மஹாசிவராத்திரி நாளில் ஈஷாவில் சிவமந்திர உச்சாடனங்கள் இலட்சக்கணக்கானவர்களால் கூட்டாக மேற்கொள்ளப்படும். மந்திரம் என்றால், அதன் பொருளில் கவனம் செலுத்துவதைவிட, அதனை ஓர் அதிர்வு என்று புரிந்து கொள்வதே முக்கியம். அந்த அதிர்வுகள் உடல், மனம் ஆகிய குறுகிய எல்லைகளைத் தாண்டிய விடுதலையை உங்களுக்கு வழங்கவல்லவது. இந்த மந்திரங்களை வெறுமனே உதட்டளவில் உச்சரிப்பதை விட உங்கள் உடலில் உள்ள ஒவ்வோர் அணுவும் உச்சரிக்கும்போது அதன் தன்மையே அற்புதமாக இருக்கும்.

பழனி சுவாமிகள் என்றழைக்கப்பட்ட மகத்தான யோகியின் வாழ்வில் ஒரு சம்பவம் நடந்தது. தன் வாழ்வு முழுவதும் அவர் “ஷம்போ” என்கிற மந்திரத்தை இடையறாமல் உச்சரித்து வந்தார். இயற்கை உபாதைகளின் போது கூட அவர் “ஷம்போ” என்று உச்சரித்ததை உள்ளூர்க் கோவிலில் இருந்த பூசாரி ஒருவர் கேட்டுவிட்டு அதிர்ந்து போனார். இது போன்ற நேரங்களில் இறைவன் பெயரைச் சொல்வது மாசுபடுத்தும் செயல் என்று நினைத்து பஞ்சாயத்தைக் கூட்டினார். ஷம்போ என்ற மந்திரத்தை உச்சரிக்கக் கூடாது என்று பஞ்சாயத்தில் தடை விதித்தார்கள். பழனி சுவாமிகள் “ஷம்போ” உச்சாடனத்தை நிறுத்தினார். உடனே அந்த இடம் முழுவதும் “ஷம்போ” என்கிற மந்திரம் எதிரொலித்தது. அவர் உடல் முழுவதும் அந்த மந்திரத்தின் அதிர்வுகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அங்கிருந்த அனைவரும் அவரது திருவடிகளில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர். மந்திரத்தை உங்களுக்குள் ஊடுருவ விடுவீர்களே யானால் அதன் அற்புதத்தை உணர்வீர்கள்.

“த்ரியம்பகன்” என்பது சிவனின் திருநாமங்களில் ஒன்று. இது மூன்றாவது கண்ணைக் குறிக்கும். மற்ற இரண்டு கண்களும் புறக்கண்கள். பார்வையில் படும் குப்பைகளை எல்லாம் அவை மூளைக்கு புகட்டிக் கொண்டிருக்கின்றன. இதன் மூலமாக யாரையாவது பார்த்தால், பழைய அபிப்பிராயங்கள் உங்களுக்குள் புறப்படுகின்றன. இந்த இரண்டு கண்களும் உண்மையைப் பார்ப்பதில்லை. எனவே அறிதலுக்கென்றே சிவனின் மூன்றாவது கண் திறக்கிறது. அதுவே ஞானக்கண். இந்திய மரபில் அறிதல் என்பது படிப்பால் பெறுவதல்ல. புத்தகங்கள் தருவதல்ல. ஆழ்ந்த புரிதலையே அறிதல் என்கிறோம். இந்த மூன்றாவது கண் திறக்கிற போதுதான் சிவனை உணர்கிறீர்கள்.

இந்த மஹாசிவராத்திரித் திருநாள் அதற்கான வாய்ப்பை உங்களுக்கு மேலும் நெருக்கமாய் மலரச் செய்கிறது. இந்த நாளில் இரவு முழுவதும் முதுகுத் தண்டை நேர் நிலையில் வைத்திருப்பது மிக முக்கியமானது. ஈஷாவில் சக்திமிக்க மந்திர உச்சாடனங்களும், தியானங்களும், கலை நிகழ்ச்சிகளும் நிகழும். இந்த சக்தி மிக்க சூழலில், மஹாசிவராத்திரியை நீங்கள் விழித்திருக்கும் இரவாக மட்டும் பாராமல் விழிப்புணர்வின் இரவாகவும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே என் ஆசியும் விருப்பமும்.

எழுத்தாக்கம் : மரபின் மைந்தன் முத்தையா


**NEED MORTGAGE ADVICE?**

Speak to an advisor



**MSD Investments**

- Mortgage Loans - 1st & 2nd
- Residential & Commercial
- Buying Home With Bad or Poor Credit
- Stated Income - Self Employed or Salaried
- Debt Consolidation
- Bankrupcy
- Refinance
- All kinds of Loans -
  1. Business Loans
  2. Credit Lines - Secured & Unsecured
  3. Personal Loans

*Are you paying lot of rent, Why not get your own home.* *Call for the expert advice*

647-344-3822 647-344-4340



01ஆம் பக்கத்தொடர்ச்சி

## நக்கீரன் ஆசிரியருக்கு மிரட்டல்!


நக்கீரன் பத்திரிகையில் ராஜபக்சேவை சபித்து வெளியிடப்பட்ட கட்டுரை தொடர்பாக நக்கீரன் சஞ்சிகை ஆசிரியர் கோபாலுக்கு சென்னையில் உள்ள இலங்கை துணைத்தூதர் அம்சா மிரட்டல் கடிதம் அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது "இலங்கை அதிபர் ராஜபக்கசே இன் புகழுக்கு களங்கம் உண்டாக்குவதாக உள்ளதால் உடனடியாக மன்னிப்புகேட்க வேண்டும். இல்லையேல் விழைவுகளைச் சந்திக்கவேண்டும்." என கூறப்பட்டுள்ளது.



அவர் மேலும் தெரிவித்ததாவது "கொத்துக் குண்டுகள் வீசப்பட்டு ஈழத்தமிழர் கொத்துக் கொத்தாக பறிக்கப்படுகின்றனர். தமிழ் மக்களின் இதயத்துடிப்பாக விளங்கும் நக்கீரன் தனது கடமையில் இருந்து இம்மியளவும் விலகாமல் தனது பணியைச் செய்து வருகிறது. இலங்கைத்துணைத்தூதரின் மிரட்டல் எமக்குக் கால்தூது. சட்டரீதியான நடவடிக்கை எடுப்போம் என்கிறாரே வழக்குத் தொடரப்போகிறாரா? வழக்கே வா என வரவேற்கின்றது நக்கீரன்.
தமிழ் இனத்தை கொன்றொழிக்கும் இலங்கை அதிபர் பற்றிய செய்தியை வெளியிட்டதற்காக நக்கீரன் ஒருபோதும் மன்னிப்புக்கேட்காது."

**இலங்கைத் தூதரகத்தை இழுத்துமூடுங்கள்!**
**என விஜயகாந் ஆவேசம்.**

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படும் சூழ்நிலையில் இந்தியாவில் அந்நாட்டுத்தூதரகம் இருக்கக்கூடாது. அடுத்த மாதத்துக்குள் இலங்கைத் தூதரகத்தை மூடவேண்டும். இல்லையென்றால் கடும் போராட்டம் வெடிக்கும் என்கிறார் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந். அவர் மேலும் கூறுகையில் "இலங்கை அரசு கத்தி வைத்துள்ளது. புலிகளிடம் கேடயம்தான் உள்ளது. அதை



வைத்து புலிகள் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். முதலில் கேடயத்தைப் போடு என்று சொன்னால் கத்தி வைத்திருப்பவன் சும்மா இருப்பானா? இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் ஒட்டுமொத்த உணர்வையும் காட்ட மிகப்பெரிய போராட்டம் தேவை. இதில் ஐ.நா. வும் அமெரிக்க அதிபர் ஒபாமாவும் தலையிட வேண்டும். அவர்களுக்கு தமிழர்கள் அனைவரும் தந்திகளும் எஸ். எம். எஸ் உம் அனுப்பவேண்டும்." என்றார்.


# சிறுவர்கள் இருக்கும் மோட்டார் வாகனங்களில் புகைத்தல் கூடாது.

**16 வயதுக்குட்பட்ட யாராவது மோட்டார் வாகனங்களில் இருக்கும் போது புகைத்தல் சட்ட விரோதமானதாகும். அபராதம் $250 வரையாகலாம்.**

ஜனவாரி 21, 2009 முதல், 16 வயதிற்குட்பட்ட ஒருவர் மோட்டார் வாகனத்தில் இருக்கும்போது, புகைப்பதை அல்லது பற்றவைக்கப்பட்ட புகைப் பொருளை வத்திருப்பதை, ஸ்மோக்-ஃப்ரீ ஒன்டாரியொச் சட்டம் தடை செய்கிறது. ஒரு புகைப்பவரின் வீட்டில் இருப்பதைவிட மோட்டார் வாகனத்தில் இருக்கக்கூடிய செக்கன்ட்-ஹான்ட் புகையின் அளவு 27 மடங்கு வரை அதிகமானதாகும். சிறிய பிரயானம் செய்யும் போது மற்றும் கண்ணாடிகள் கீழிறக்கப்பட்டிருக்கும் போதுகூட இது ஆபத்தானதே.

செக்கன்ட்-ஹான்ட் புகையை சுவாசிக்கும் பிள்ளைகள், திடீர் சிறார் மரணக் குறைபாடு, ஆஸ்த்துமா மற்றும் வாழ்க்கையின் பிற்காலங்களில், கான்சர், இருதய நோய் போன்ற உடல் நலக் கோளாறுகளால் அவதிப்பட அதிக சாத்தியம் இருக்கிறது.

மேலதிக தகவல்களுக்கு, உங்கள் பொதுசன உடல்நல யூனிட்டை தொடர்புகொள்ளுங்கள் அல்லது 1-866-396-1760 என்ற இலவச இன்போ லைனை அழைக்கவும். TTY: 1-800-387-5559. அல்லது www.ontario.ca/smokefree யிற்கு விஜயம் செய்யவும்.

புகைப்பழக்கத்தை நிறுத்த உதவிக்கு, www.smokershelpline.ca விற்கு விஜயம் செய்யவும் அல்லது 1-877-513-5333 ஐ அழைக்கவும்.

இது ஒரு ஒன்ராறியோ மாகாண அரச விளம்பரம்

Ontario

SMOKE FREE ONTARIO

# இலங்கைக்கு ஆப்பு வைத்தனர் (2) பதான்கள் !!!

## விளையாட்டுத் தகவல்கள் 254

கொழும்பில் செவ்வாய்கிழமை நடைபெற்ற 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இலங்கையை 3 விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்தது இந்தியா.

பதான் சகோதரர்களின் ஆட்டம் அணியின் வெற்றிக்கு வித்திட்டது. இதன் மூலம் டி - 20 போட்டிகளில் தான் சம்பியன் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது தோனி தலைமையிலான அணி. கொழும்பு பிரேமதாசா ஸ்ரேடியத்தில் மின்னொளியில் இப்போட்டி நடந்தது.

172 ஓட்டங்களைச் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இந்திய அணி 4 பந்துகள் மீதமிருக்கையில் 7 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டி வெற்றி கண்டது.

கம்பீர், சேவாக் விரைவிலேயே ஆட்டமிழந்தனர். இதனால் ஏமாற்றம் அடைந்த ரசிகர்களுக்கு, ரெய்னா, யுவராஜ் ஆட்டம் ஓரளவு திருப்தி அளித்தது. அதன் பின்னர் வெற்றி நம்பிக்கை குறைய, யூசுப் பதான் - இர்ஃபான் பதான் ஜோடி நிலைத்து ஆடி, முடியாததை முடித்துக் காட்டியது. இந்த ஜோடி 8வது விக்கெட்டுக்கு 59 ஓட்டங்களைக் குவித்தது.

திருப்பம் அளித்த யூசுப் - ஒரு கட்டத்தில் 27 பந்துகளில் 52 ஓட்டம் வெற்றிக்குத் தேவைப்பட்டது. ஆட்டத்தின் 16வது ஓவரில் பதான் ஜோடி 17 ஓட்டங்களைக் குவித்து போட்டிக்கு திருப்பம் அளித்தது. யூசுப் பதான் 10 பந்துகளில் 22 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இவரே ஆட்ட நாயகனாக தேர்வுபெற்றார். இர்ஃபான் பதான் 16 பந்துகளில் 33 ஓட்டங்களைக் குவித்தார். பந்தை சிக்ஸருக்கு விரட்டி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார் இர்ஃபான்.

இலங்கை 171 - முன்னதாக இலங்கை அணி 4 விக்கெட்டுகளை இழந்து 171 ஓட்டங்களைக் குவித்தது. 'Toss' வென்ற இலங்கை அணியின் அணித்தலைவர் திலகரத்னே தில்ஷான் முதலில் பேட் செய்வதாக அறிவித்து, ஜயசூர்யாவுடன் இன்னிங்ஸைத் தொடங்க களம் புகுந்தார். இந்தியா சார்பில் ஜாகீர் கானும், இஷாந்த் சர்மாவும் பந்துவீச்சைத் தொடங்கினர். இவர்களது வீச்சு சிறப்பாக இருந்தாலும் தில்ஷான் ஜயசூர்யா ஆட்டம் இலங்கை அணிக்கு சிறந்த அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்கு இந்த ஜோடி 59 ஓட்டங்களைக் குவித்தது.

**ஜயசூர்யா 33** - 17 பந்துகளில் 33 ஓட்டங்களைச் சேர்ந்திருந்தபோது இர்ஃபான் பதான் வீசிய பந்தில் சர்மாவிடம் 'கேட்ச்' கொடுத்து வெளியேறினார் ஜயசூர்யா. அவரது எண்ணிக்கையில் 3 பவுண்டரி, 2 சிக்ஸர் அடங்கும். அதன் பின்னர் உள்ளே வந்த முபராக், கபுகேதரா ஆகியோர் இந்தியப் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விரைவிலேயே ஆட்டமிழந்தனர்.

**தில்ஷான் 61 -** அதேசமயம் அணித்தலைவர் தில்ஷான் நிலைத்து ஆடி 61 ஓட்டங்களைக் குவித்தார். ஒரு கட்டத்தில் இஷாந்த் சர்மாவின் வீச்சில் ஓட்டங்களைக் குவித்த இவர், அவரது வீச்சிலேயே 'கேட்ச்' கொடுத்து வெளியேறினார். 7 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உள்பட 47 பந்துகளில் 61 ஓட்டங்களைக் குவித்து வெளியேறினார் தில்ஷான். இதுவே தனிப்பட்ட ஒருவரின் அதிகபட்சமாக அமைந்தது.

சில்வா 21 ஓட்டங்களுடனும், வீரரத்னே 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியப் தரப்பில் யூசுப் பதான் பந்துவீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. 23 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

### 503 விக்கெட்டுக்கள் - முரளிதரன் உலக சாதனை

இந்தியாவிற்கு எதிரான 4வது ஒரு நாள் போட்டியில் 150 ஓட்டங்கள் எடுத்த கௌதம் கம்பீர் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 503வது விக்கெட்டை வீழ்த்தி ஒரு நாள் போட்டிகளில் 502 விக்கெட்டுகள் என்ற உலக சாதனையை வைத்திருந்த வாசிம் அக்ரமை முறையடித்தார்.

முரளிதரன் 328ஆவது ஒரு நாள் சர்வதேச போட்டியில் முரளி 503 வது விக்கெட்டை வீழ்த்தினார். இருப்பினும் இன்றைய பந்து வீச்சு அவருக்கு திருப்தியளித்திருக்க முடியாது என்றே கூறவேண்டும் 10 ஓவர்களில் அவர் 66 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஒரே விக்கெட்டை கைப்பற்றினார்.

ஆஃப் ஸ்டம்பிற்கு வெளியே சென்ற பந்தை தேர்ட் மேன் திசையில் தட்டிவிட முயன்ற கம்பீர், சங்கக்காரவிடம் கேட்ச் கொடுத்து முரளிதரன் உலக சாதனை விக்கெட்டானார். வாசிம் அக்ரம் 356 ஒருநாள் போட்டிகளில் 502 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

### பெடரரை வீழ்த்தி நடால் சாம்பியன்

அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் ரெனிஸ் ஒற்றையர் இறுதிப் போட்டியில் உலகின் 2ஆம் தரவரிசையிலுள்ள சுவிஸ்வீரர் ரோஜர் ஃபெடரரை முதலாம் தரவரிசை ஸ்பெயின் வீரர் ரஃபேல் நடால் 5 செட்கள் ஆட்டத்தில் வீழ்த்தி ஆஸி ஓபன் கிராண்ட் ஸ்லாம் சாம்பியன் பட்டம் வென்றார்.

சுமார் 4மணி நேரம் 23 நிமிடங்கள் நடைபெற்ற இந்த அதி அற்புதமான போட்டி, மிகுந்த உயர் தர ரெனிஸ் இறுதி ஆட்டத்தில் ரஃபேல் நடால் 7 - 5, 5 - 3, 6 - 7, 6 - 3, 6 - 6, 2 என்ற செட்களில் அயராது போராடி ஃபெடரரை வீழ்த்தினார். அதிக கிராண்ட் ஸ்லாம் ரெனிஸ் சாம்பியன் பட்டம் வென்ற பீட் சாம்பிராஸை சமன் செய்யும் ஃபெடரரின் கனவை ரஃபேல் நடால் மீண்டும் முறியடித்தார். முதல் செட்டின் துவக்கத்திலேயே இருவரும் மாறி மாறி தங்களது சர்வை தோற்றனர். பிழையினால் அல்ல இருவரும் அபார ரெனிஸ்ஸை விளையாடினர். ஆனால் ரஃபேல் நடால் 3வது முறை ஃபெடரர் சர்வை முறியடித்த போது முதல் செட்டை 7 - 5 என்று வெற்றி பெற்றார். இரண்டாவது செட்டில் ஃபெடரர் இரண்டு நடால் சாவ்களை முறியடித்து அபரமான தரை ஷாட்களில் ஃபோர் ஹேண்டில் தனது திறமையை வெளிப்படுத்தி செட்டை 6 - 3 என்று கைப்பற்றினார்.

3வது செட்டிலும் இருவரும் தங்களது தோற்றாலும் பிறகு மீண்டு 6 - 6 என்று சமன் முறிவுக்கு தள்ளினர். இதில் ஃபெடரர் சில தவறுகளைச் செய்ய இந்த முறை ரஃபேல் நடால் அபாரமான ஃபோர் ஹேண்ட் பேக் ஹேண்ட், வாலி ஷாட்களை ஆடி ஃபெடரர் பிரமிக்க வைத்து 7 - 3 என்று ரை பிரேக்கரில் வெற்றி பெற்று 2 - 1 என்ற செட்கணக்கில் நடால் முன்னிலை வகித்தார். ஆனால் அடுத்த செட்டில் மீண்டும் ஃபெடரர் எழுந்தார். இரண்டு பிரேக்குகளை கொடுத்து செட்டை 6 - 3 என்று கைப்பற்றினார். கடைசி செட்டில் ஃபெடரரின் ஷாட்கள் பல நெட்டில் அடித்தும் வெளியில் சென்றும் அவருக்கு நிலை தடுமாற்றத்தை ஏற்படுத்தின. கடைசியில் ஃபெடரரின் உடல் மொழி, ஆட்டத்தை அவர் கைவிட்டது போல்தான் தெரிந்தது. கடைசி செட்டை இதனால் 6 - 2 என்று நடால் கைப்பற்றி சாம்பியன் பட்டத்தை வென்றார். ஃபெடரரின் சர்வை முறியடித்து கடைசியாக ஒரு அபாரமான ஃபோர் ஹேன்ட் ஷாட் மூலம் வெற்றி பெற்றார் நடால்.

ரஃபேல் நடாலின் 6வது கிராண்ட் ஸ்லாம் பட்டம் ஆகும். இது 13 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற ரோஜர் ஃபெடரர் சாம்ப்ராஸின் சாதனையை சமன் செய்ய விடாமல் விம்பிள்டன் மற்றும் தற்போது அவுஸ்திரேலிய ஓபன் டெனிஸ்லும் ஃபெடரரை வீழ்த்தியுள்ளார் நடால்.

### ஆஸி. ஓபன் ரெனிஸ் - பட்டம் வென்றார் செரீனா வில்லியம்ஸ்

அவுஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் போட்டியில் நான்காவது முறையாக பட்டம் வென்றுள்ளார். அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம் தன்னை எதிர்த்து விளையாடிய சஃபினாவை 6-0, 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்தி பட்டம் வென்றார் செரீனா. இதற்கு முன்னர் 2003, 2005, 2007 ஆகிய ஆண்டுகளில் இவர் ஆஸி ஓபனில் பட்டம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஐ.பி.எல் அணியை வாங்கினார் ஷில்பா

ஐ.பி.எல் அணி நிர்வாகத்தில் மீண்டும் ஒரு பாலிவுட் ஸ்டார் நுழைந்து இருக்கிறார். ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் உரிமையில் 12 சதவீத பங்கினை வாங்கி இருக்கிறார் ஷில்பா ஷெட்டி. ஷாருக்கான் (கல்கட்டா நைட் ரைடர்ஸ்) பிரீத்தி ஜிந்தா (கிங்ஸ் லெவன் பஞ்சாப்) என இருவரை அடுத்து ஐ.பி.எல் தொடரில் மூன்றாவது பாலிவுட் நட்சத்திரமாக ஷில்பா ஷெட்டி நுழைந்து இருக்கிறார். இந்தியன் பிரிமியர் லீக் சார்பில் (ஐ.பி.எல்) 'டுவென்டி -20' தொடரின் இரண்டாவது கட்ட போட்டிகள் வரும் ஏப்ரல் மாதம் நடக்க இருக்கிறது.

இந்நிலையில் வீரர்கள் பரிமாற்றம் தற்போது நடந்து வருகிறது. அவுஸ்திரேலியா சுழல் ஜாம்பவான் வார்ன் தலைமையிலான ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் தென்ஆபிரிக்கா அணியின் அணித்தலைவர் ஸ்மித் ஆல்ரவுண்டர் வாட்சன் உட்பட பல பிரபல வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். கடந்த தொடரில் இந்த அணி சாம்பியன் கோப்பையை கைப்பற்றி இருந்தது. இதனிடையே இந்த அணியின் 12சதவீத பங்கினை பாலிவுட் நட்சத்திரம் பாலிவுட் நட்சத்திரம் ஷில்பா ஷெட்டி தன்னுடைய லண்டன் தொழில் அதிபர், பார்ட்னர் ராஜ் குந்தனுடன் இணைந்து ரூ 57 கோடி கொடுத்து ஷில்பா ஷெட்டி வாங்கி இருக்கிறார். இதுகுறித்து ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் உரிமையாளர் மனோஜ் பதலே கூறியது. நாங்கள் நல்ல திறமையான பார்ட்னரை தேடிவந்தோம். எங்கள் அணியின் உரிமையை உலகளாவிய அளவில் கொண்டு செல்ல விரும்பினோம். ஷில்பா ஷெட்டி, ராஜ் குந்தன் இருவரும் இணைந்து, அணியின் 12 சதவீத பங்கினை வாங்கி இருக்கிறார்கள். கடந்த ஆண்டு பங்கேற்ற அணிகளில் இது இரண்டாவது பிரபலம் வாய்ந்த அணி. ஆனால் முதன்மையான அணி.

இந்தியாவில் கிரிக்கெட் பிரபலம். புதிய வீரர்களை உருவாக்கும் முயற்சியில் இந்த ஆண்டு 9 வீரர்களை அறிமுகம் செய்ய இருக்கிறோம். இது தொடர்பாக அணித்தலைவர் வார்ன் பலமுறை இந்தியாவுக்கு வந்து சென்றுள்ளார். பாகிஸ்தான் வீரர்கள் வராதது குறித்து கவலை இல்லை. நாங்கள் எந்த குறிப்பிட்ட வீரர் மீதும் ஆர்வம் காட்டுவதில்லை. வீரர்களுடன் பங்கேற்க இருக்கும் எங்கள், அணி சரியான திறமையிடன் இருக்குமாறு பார்த்துக் கொள்வோம். இவ்வாறு மனோஜ் தெரிவித்தார்.

**விரைவில் ஆல்பம்** - அணியின் பங்கை வாங்கியது குறித்து ஷில்பா ஷெட்டி கூறுகையில், 'இது தொழில் ரீதியிலானது. தோல்வி பெறும் அணியின் மீது உரிமை கொண்டாடுவது எனது பாலிசி. ராஜஸ்தான் ராயல்ஸ் அணி, கோப்பை வெல்லும் முன்பு தோல்வியுறும் அணியாகவே கருதப்பட்டது. இனி அணியின் வளர்ச்சிக்காக பாடுபடுவேன். விரைவில் இது குறித்து இசை ஆல்பம் வெளியிட இருக்கிறேன்', என்றார்.

### ஒருநாள் கிரிக்கெட் ரேங்கிங்கில் முதலிடத்தை பிடித்தது தென்ஆபிரிக்கா

பெர்த் - பெர்த்தில் நடைபெற்ற இறுதி ஒருநாள் போட்டியில் தென்ஆபிரிக்கா 39 ஓட்டம் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றி மூலம் சர்வதேச ஒருநாள் போட்டிக்கான ரேங்கிங்கில் முதல் இடத்தை பிடித்துள்ளது. அவுஸ்திரேலியா சென்றுள்ள தென்ஆபிரிக்க அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. 5போட்டிகளின் முடிவில் தென்ஆபிரிக்கா 4 - 1என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. அவுஸ்திரேலியா, தென்ஆபிரிக்க அணிகள் மோதிய கடைசி ஒருநாள் போட்டி இன்று பெர்த்தில் நடைபெற்றது. இதில் தென்ஆபிரிக்க அணி வெற்றி பெறும் பட்சத்தில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) சிறந்த ஒருநாள் அணிக்கான ரேங்கிங்கில் முதலிடம் பிடிக்கலாம் என்ற நிலையில் களமிறங்கியது.

Toss வென்று முதலில் பேட் செய்த தென்ஆபிரிக்கா 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பற்கு 288 ஓட்டங்கள் எடுத்தது. ஆம்லா சிறப்பாக விளையாடி 97 ஓட்டங்கள் எடுத்தார். டி வில்லியர்ஸ் 60 ஓட்டங்கள் எடுத்தார். கிப்ஸ் 7 ஓட்டங்களிலும், மெக்கென்சி 10 ஓட்டங்களிலும், மோர்கல் 14 ஓட்டங்களிலும் அவுட் ஆனார்கள். ஹோப்ஸ் 3 விக்கெட்டுகளையும் ஹில்பென்ஹாஸ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். 289 ஓட்டங்கள் இலக்கு- அவுஸ்திரேலியாவிற்கு 289 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இலக்கை விரட்டி செல்ல துவங்கிய அவுஸ்திரேலியாவிற்கு துவக்கத்திலேயே தென் ஆபிரிக்கா பந்து வீச்சாளர் சாட்சோப் மார்ஷை அவுட் ஆக்கி அதிர்ச்சி அளித்தார். அடுத்து சிறிது நேரத்தில் ரிக்கி பாண்டிங் 12 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் இவரது பந்தில் அவுட் ஆனார். வார்னர் 22 ஓட்டங்களிலும், கிளார்க் ஓட்டம் ஏதும் எடுக்காத நிலையிலும் அவுட் ஆனார்கள். மெக் ஹசி 78 ஓட்டம், டிஹசி 32 ஓட்டம் எடுத்து அவுட் ஆயினர். இறுதியில் 249 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தனர். தென் ஆபிரிக்க தரப்பில் மார்க்கல் 4 விக்கெட்டுகளையும் பார்னல் 2 விக்கெட்டுகளையும் டுமினி மற்றும் சோடசோபீ தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.


**தென்ஆபிரிக்கா முதலிடம்** - ஐந்தாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் தென்ஆபிரிக்க அணி சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) சிறந்த ஒருநாள் அணிக்கான ரேங்கில் முதலிடத்தை பிடித்தது. இவ்விரு அணிகள் மோதிய ரெஸ்ற் தொடரில், சிட்னி ரெஸ்ரில் ஆறுதல வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா அணி தொடரை இழந்த போதும், முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.



எஸ். கணேஷ்


**Raphael Maharaja** கனேடியத் தமிழ் வழக்கறிஞர்

**Barrister, Solicitor & Notary Public**



- வீடு, காணி, வர்த்தகச் சட்டம்
- அகதி, குடிவரவுச் சட்டம்
- விபத்து இழப்பீடு
- குடும்பச் சட்டம்
- தத்துவப் பத்திரம், இறுதி விருப்பாவணம், சத்தியப் பத்திரம்
- ஆங்கில, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

> Real Estate & Business Law
> Refugee & Immigration Law
> Personal Injury
> Family Law
> Estate Planning, Power of Attorney & Affidavits
> English, Tamil & Sinhala Translation



Tel: 416-847-7077 Fax: 416-847-7088

# 12 ஆண்டுகளின் பின் வீட்டு விலையில் சரிவு?

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 292

உலகளாவிய பொருளாதார தேக்கத்தால் நுகர்வோர் தமது செலவு செய்யும் முறையை மாற்றிக் கொள்கின்றார்கள். பணப்பாதுகாப்பை தேடுகின்றார்கள் அல்லது இருக்கும் பணத்தை பாதுகாக்க விரும்புகிறார்கள். எதிர்காலத்தை எண்ணி மிகவும் கவனமாகவும் இறுக்கமாகவும் இருக்க எண்ணுகிறார்கள். பெரிய கொள்வனவுகளை தள்ளிப்போடுகின்றார்கள் அல்லது தவிர்க்கப் பார்க்கிறார்கள். உதாரணமாக மனை, வாகனம், தளபாடங்கள் போன்றவற்றின் கொள்வனவு.

இதனால் பொருளாதாரத்தில் மேலும் தாக்கம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பமே ஏற்படும். கனடாவில் கடந்த வருட இறுதிப்பகுதியில் வீட்டின் விலையில் இறக்கம் ஏற்பட்டது அறிந்ததே. இதனை எதிர்பார்த்த மத்தியவங்கி கனடிய வட்டிவீதத்தை தொடர்ந்து இறக்கி வருகின்றது. உதாரணமாக ஜனவரி 2008 இல் கனடிய மத்தியவங்கியின் வட்டிவீதம் 4.25% ஆகக் காணப்பட்டது. வருட முடிவில் கிட்டத்தட்ட இதன் அரைவாசியாக குறைந்தது. அதாவது 2008இன் ஆரம்பத்தில் முதன்மை வட்டிவீதம் (Prime Rate) 6% ஆகக் காணப்பட்டது. வருட இறுதியில் 3.5% ஆகக் குறைந்தது. அத்துடன் இந்த வருடத்தொடக்கத்தில் மேலும் இறக்கம் ஏற்படுத்தப்பட்டது.

வீடு வாங்கும்போது பெறும் கடனை திருப்பிக் கொடுக்கும் காலம் 35 ஆண்டாக அதிகரித்திருப்பதால், மாதாந்த கட்டுப்பணத்தில் பெரிய வித்தியாசத்தைக் காணலாம்.

உதாரணமாக 2008 இன் ஆரம்பத்தில் $300,000 இற்கு அடமானம் பெற்றோர் (35 வருட Amortization) 6% வட்டியில் மாதாந்த கொடுப்பனவு $1746 செலுத்தியிருப்பர். இதே தொகையை இந்த வருட (2009) ஜனவரியில் மாதாந்த கொடுப்பனவு (4% வட்டி வீதத்தில்) $1323 செலுத்துவர். கிட்டத்தட்ட $400 வித்தியாசம் காணப்படுகின்றது.

கடந்த 12 வருடங்களாக வீட்டின் சராசரி விலை ரொறொன்ரோ பெரும்பாகத்தில் அதிகரித்தே வந்துள்ளது. கடந்த வருடத்தின் (2008) இறுதிப்பகுதியில் விலை குறைந்தபோதிலும், 2008ஆம் ஆண்டில் வீட்டின் சராசரி விலை, இதற்கு முந்தைய வருடத்தை (2007) விட அதிகரித்தே உள்ளது.

2008இல் சராசரி வீட்டுவிலை $379,347 ஆகவும், 2007இல் சராசரி வீட்டுவிலை $376,236 ஆகவும் காணப்படுகின்றது. 2006 இற்குப் பின்னர் மனை விலை தொடர்ச்சியாக அதிகரித்தே வந்திருக்கின்றது. இந்த நீண்ட கால அதிகரிப்பு முன்பு எப்பொழுதும் காணாததாகும். இதற்கு பல காரணங்களை முன்வைத்த போதும் உலக ரீதியில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி, ஒப்பீட்டளவில் குறைந்த வட்டி வீதம், நிதி நிறுவனங்களின் பணத்தை வழங்கிய தாராளக் கொள்கை, அதிக புதிய குடிவரவாளர்களின் கனடா மீதான நாட்டம் போன்றவற்றை குறிப்பிடலாம்.

என்னுடைய அனுமானத்தில் கடந்த 12 வருடத்தில் முதல் முறையாக 2009 இல் சராசரி வீட்டு விலை குறையும் என்பதனை எதிர்பார்க்கலாம்.

## 2008இல் வட்டி மாற்றம்

| காலம் | முதன்மை வட்டிவீதம் |
|---|---|
| ஜனவரி 01, 2008 - ஜனவரி 22, 2008 | 6.00% |
| ஜனவரி 23, 2008 - மார்ச் 04, 2008 | 5.75% |
| மார்ச் 05, 2008 - ஏப்ரல் 22, 2008 | 5.25% |
| ஏப்ரல் 23, 2008 - ஒக்ரோபர் 08, 2008 | 4.75% |
| ஒக்ரோபர் 09, 2008 - ஒக்ரோபர் 13, 2008 | 4.50% |
| ஒக்ரோபர் 14, 2008 - ஒக்ரோபர் 21, 2008 | 4.25% |
| ஒக்ரோபர் 22, 2008 - டிசம்பர் 09, 2008 | 4.0% |
| டிசம்பர் 10, 2008 - டிசம்பர் 31, 2008 | 3.5% |



விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையில் 2008ஆம் ஆண்டில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 2007 ஐ விட குறைந்தே காணப்படுகின்றது. 2008 இல் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 2002ஆம் ஆண்டு விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையுடன் ஒத்து காணப்படுகின்றது. இதிலிருந்து நாம் அவதானிக்க கூடியது, வீடு வாங்குபவர்கள் சந்தையில் இருக்கின்றபோதும் பொறுத்திருப்பதை காணலாம். இந்நிலைமை மாறும்போது விற்கப்படும் எண்ணிக்கையும் விரைவாக அதிகரிக்கும் என்பது தெரிவாகின்றது.

1996 இல் சராசரி வீட்டுவிலை $198,158 ஆகக் காணப்பட்டது. 2008 இல சராசரி வீட்டுவிலை $379,347 ஆக அதிகரித்தது. இத்துடன் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இருந்தும் கடந்த வருடத்தில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 2007 உடன் ஒப்பிடும்போது 20% குறைந்தே காணப்பட்டது. எண்ணிக்கையில் இது ஒரு பெரிய இறக்கமே.

2009 இல் ஏற்படப்போகும் வட்டி இறக்கமும், கனடிய மத்திய, மாநில, மாநகர அரசுகளின் தொடர்ச்சியான பொருளாதார ஊக்குவிப்புகளும், வீட்டின் விலையில் எவ்விதமான மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதனை எதிர்காலத்தில் பார்ப்போம்.

| ஆண்டு | விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | சராசரிவிலை TREB பகுதியில் |
|---|---|---|
| 2008 | $74,552 | $379,347 |
| 2007 | $93,193 | $376,236 |
| 2006 | $83,084 | $351,941 |
| 2005 | $84,145 | $335,907 |
| 2004 | $83,501 | $315,907 |
| 2003 | $78,898 | $293,067 |
| 2002 | $74,759 | $275,231 |
| 2001 | $67,612 | $251,508 |
| 2000 | $58343 | $243,255 |
| 1999 | $58,957 | $228,372 |
| 1998 | $55,344 | $216,815 |
| 1997 | $58,014 | $211,307 |
| 1996 | $55,779 | $198,150 |


ஸ்காபரோ, மிசிசாக 2 இடங்களில், 140இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்

HomeLife GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969 /145 Traders Blvd # 28, Mississauga - 905.712.2666

HOMELIFE HIGHER STANDARDS

*Independently owned & operated



Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)

# CATERING / RESTAURANT FOR SALE

- Running business
- Location: Markham / Eglinton
- Resonable Rent
- Recently renovated
- Asking price $45,000 only
- Don't miss this chance

Nantha Aiyadurai

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# தொல்காப்பியரின் நாடக வழக்கு

தொல்காப்பியம் தமிழ் நூல்களிலே முதன்மையானது. காலத்தினால் முற்பட்டது. தொடக்கம் தெரியாத தமிழர் நாகரிகத்தின் தொன்மையையும் செழுமையையும் விழுமிய முறையில் துலக்குவது. எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களாகவுள்ள தொல்காப்பியத்தில் முதலிரண்டும் மொழிக்கு இலக்கணம் கூறுகின்றன. மூன்றாவதாகிய பொருளதிகாரம் மக்கள் வாழ்க்கை முறையை ஒழுக்கங்களாக வகுத்து விளக்குகின்றது. அவை இன்ன தன்மையனவென்று வரையறையும் செய்கின்றது. இவ் விளக்கங்கள் யாவும் பண்டைத் தமிழர் போற்றிய பழக்க வழக்கங்களைத் தழுவித் தரப்பட்டுள்ளன. வழக்கு என்று சொல்லப்படுவது உயர்ந்தோர் பின்பற்றிய ஒழுக்க முறைகளையேயாம்.

வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே(1).

இத்தகைய வழக்கு மூவகைப்படும். அவை உலக வழக்கு, நாடக வழக்கு, செய்யுள் வழக்கு என்பன. உலக வழக்கு என்பது உலகத்தார் இயல்பாகப் பின்பற்றிவரும் வாழ்க்கைமுறை. அவற்றில் உயர்ந்தவற்றைப் புலவர் புனைந்து கூறுவது நாடக வழக்கு எனப்படும். உலக வழக்கும் நாடக வழக்கும் சேர்ந்ததே செய்யுள் வழக்கு ஆகும். அது நூல் நெறி வழக்கு அல்லது புலனெறி(புலன் நெறி) வழக்கு என்றும் வழங்கப்பெறும். இவற்றைத் தொல்காப்பியர்,

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலநெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாவினும்
உரியதாகும் என்மனார் புலவர்(2)

என்று குறிப்பிடுகின்றார். 'நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும் உள்ள அகப்பொருள் கலி, பரிபாடல் ஆகிய இரண்டு பா வகைகளாலும் கூறுதற்குரியன என்று புலவர் சொல்லுவர்' என்பது இதன் பொருள். அகப்பொருள் என்பது அகத்திணை சார்ந்த ஒழுக்கங்கள்.

நாடக வழக்கு

தொல்காப்பியர் காலத்தில் நாடகம் ஆடும் வழக்கமும் புலனெறி வழக்கமாகிய நூல்கள் செய்யும் மரபும் நன்கு வளர்ச்சியடைந்திருந்தன. தொல்காப்பியத்துக்கு உரைகள் கண்ட ஆசிரியர்களில் ஒருவரான இளம்பூரணர் நாடக வழக்கை, 'செல்வத்தானும் குலத்தானும் ஒழுக்கத்தானும் அன்பானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போருமின்றி அடுப்போருமின்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வரைந்தெய்தினர் எனவும் பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்ததாகக் கூறுதல்' என விளக்குகின்றார்.

எனவே நாடக வழக்கு புனைந்துரை வழக்கம் என்பது புலனாகின்றது. புனைந்துரை - கற்பனை. 'ஒருங்கு வந்ததாகக் கூறுதல்' - நிகழ்ச்சிகள் ஓரிடத்து நடந்தனவாகத் தொகுத்து உரைத்தல். அவ்விதம் நாடகத்தில் வருவதுபோல் செய்யுள் வகைகளில் புனைந்து உரைத்தல் புலவர் வழக்கம் - புலனெறி வழக்கம்.

புனைந்துரைத்தல் கற்பனை என்றாலும் அதற்கு அக்காலத்து நடிக்கப்பெற்ற நாடக மரபே வழிவகுத்திருக்க வேண்டும் என்பது சொல்லாமலே போதரும். நாடக மரபே ஓரிடத்தில் நிகழ்ச்சிகள் ஒருங்கு வந்ததாகக் காட்டும் மரபு. அந்த ஓரிடமே நாடகம் நடித்துக் காட்டப்படும் அரங்கமாகும். இது கிரேக்க ஞானி அரிஸ்டோட்டில் நாடகத்துக்குத் தந்த விளக்கத்தோடும் ஒத்துப் போவதும் நோக்கத்தக்கது. (Drama is defined by Aristotle as "a criticism of life, on a stage, with action, characters and dialogue.")

இக்காலத்தவர் நாடகம் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்கும் இளம்பூரணர் கூறும் ஓரிட விளக்கம் இசைவாக உள்ளதையும் கவனிக்கலாம். தற்காலத்தவர் நாடகத்தை 'A situation or succession of events in real life having the dramatic progression or emotional effect characteristic of a play' என்றும் 'A series of real events invested with a dramatic unity and interest' என்றும் பொதுவாக விளக்குவர். (தொடரும்)



கவிஞர் வி. கந்தவனம்




யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

mhc

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |


Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

SAFETY TRUCKS
Training School Ltd.
Training & Trucking Classes A, D & Z

In Classes
• 365 (Learning Permit)
• Log Books
• Air Brake (Z)
• Dangerous Goods
• Border Crossing
• Defensive Driving Course




21 Years Canadian
Experience with Trucks

• தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
• One On One Training
• அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
• கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (14 ஆம் ஆண்டு)
• We Accept Welfare & Unemployment Insurance
• வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
905-793-9546 / 416-616-5979
4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

# ஏனைய நாடுகளில் வாகனமோட்டிய அனுபவங்கள் கனடாவின் வாகன காப்புறுதியில் கருத்தில் கொள்ளப்படுமா?

கனடாவில் வாகன காப்புறுதி ஒப்பந்தம் செய்வதற்கு மனு செய்யும் போது, இவ் ஒப்பந்தத்திற்காக மாதா மாதம் செலுத்தும் விலையினை தீர்மானிப்பதில் பல அம்சங்கள் கருத்தில் கொள்ளப்படுவது வழமையாகும். அதில் முக்கியமான ஒரு அம்சமாக பின்வரும் குறிப்பிடப்பட்ட வினா எழுப்பப்படுவது வழமையாகும்.

சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

**ஏற்கனவே வாகன காப்புறுதி பெற்று வைத்திருந்து, வாகன மோட்டிய அனுபவம் என்பது எவ்வளவு காலம்? இவ்வளவு காலங்களில் ஏதாவது விபத்துகளை எதிர் கொண்டு, நட்ட ஈடு கோர வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டதா? அவ்வாறு கோரியிருந்தால் எந்த நிலையில் இருந்து *(At Fault Cr no faul claim)* நட்ட ஈடு கோரப்பட்டது?**

மேற்குறிப்பிடப்பட்ட இக் கேள்விக்கு காப்புறுதியின் பார்வையில் சாதகமான பதில் இருந்தால் மாதா மாதம் செலுத்தும் விலை குறைவானதாக இருக்கும் பாதகமாக இருந்தால் பொதுவாக விலை அதிகமாக இருப்பது தவிர்க்க முடியாத ஒன்றாக நிச்சயமாக இருக்கும்.

கனடாவில் வாகனமோட்டிய அனுபவங்கள் என்பது சாரதி அனுமதி பத்திரம் குறிப்பிட்ட காலம் எனப்பெற்று வைத்திருந்தால் மட்டும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. வாகன காப்புறுதி கம்பனி ஒன்றில் காப்புறுதி ஒப்பந்தம் குறிப்பிட்ட காலம் செய்து வைத்திருந்து தொடர்ந்து வாகனம் ஒன்றினை குறிப்பிட்ட இவ்வளவு காலம் ஓட்டியவர் என்பது, சாரதி அனுமதி இலக்கத்துடன் பதிவுகளில் இருக்கும் போதே அது அனுபவமாக கருத்தில் கொள்ளப்படுகின்றது. கனடாவில் இப்பதிவுகளை சி.ஜி.ஐ என்னும் நிறுவனம் பதிவு செய்து வைத்திருந்து, 'ஆட்டோ பிளஸ்' (Auto Plus Report) என்னும் அறிக்கையின் பெயரில் தேவையான சந்தர்ப்பத்தில் காப்புறுதி கம்பனிகளுக்கும், முகவர் நிலையங்களுக்கும் வழங்குகின்றது. ஒவ்வொருவரும் தங்கள் சாரதி அனுமதி பத்திர இலக்கத்தினூடாக தங்கள் தங்கள் வாகன காப்புறுதி பதிவு வரலாறுகளை விரும்பினால் பரிசீலனை செய்தும் பார்க்கலாம்.

இவ்வரலாற்று பதிவுகளில் ஏற்று கொள்ள முடியாத நிலையில், விபத்து தொடர்பான சம்பவங்கள், அல்லது விபத்தில் சரி? பிழை? எந்தப்பக்கம், எவ்வளவு வீதத்தில் எனத்தீர்ப்புக்கள் பதியப்பட்டு விட்டால் அதில் நாம் எதுவிதமான மாற்றமும் செய்ய முடியாது. ஆனால் விரும்பினால் இப்பதிவுகளை அங்கு வழங்கிய வாகன காப்புறுதி கம்பனியோடு தொடர்பு கொண்டு, காப்புறுதி கம்பனியினுள் உள்ள நடுவர் மன்றம் (Insurance Company Ombudsman Department) அல்லது சகல காப்புறுதி கம்பனிகளின் நடுவர் மன்றம் (General Insurance Ombudsman) போன்றவற்றுக்கு மனு செய்து, விசாரணையில் தங்கள் பக்கம் உள்ள நியாயத்தினை நிரூபித்து அவர்கள் மூலம் பதிவுகளில் மாற்றம் செய்ய முயற்சிக்கலாம். ஆனால் ஏனைய நாடுகளில் வாகனம் ஓட்டிய அனுபவங்கள், வரலாறுகள் என்பது இங்கு கனடாவில் உள்ள சி.ஜி.ஐ நிறுவனத்தின் பதிவுகளில் இருக்கமாட்டாது. இந்த நிலையில் அனேகமான வாகன காப்புறுதி கம்பனிகள் ஏனைய நாடுகளில் உள்ள வாகன மோட்டிய அனுபவங்களை கருத்தில் கொள்வதில்லை. ஆனால் சில கம்பனிகள் மட்டும் ஏனைய நாடுகளில் வாகன மோட்டிய அனுபவம் இருந்தால், அவ் அனுபவங்கள், வரலாறுகள் யாவும் ஒழுங்கான தகவல்களாக உறுதிப்படுத்தப்பட்டு தரப்படும் போது அதனை அனுபவமாக எடுத்துக் கொள்கின்றது. அதாவது கடந்த சுமார் குறைந்தது மூன்று வருட காலமேனும் வாகனமோட்டிய அனுபவம் என்பது 'விபத்துகள் நட்டஈடு கோரல்கள் என எவையும் எதிர்கொள்ளாத அனுபவம்' (Proof of Claims Free Experience) என்பது சரியான முறையில் நிரூபிக்கப்படும்போது அது சில கம்பனிகளினால் கருத்தில் கொள்ளப்படுகிறது. இவ் நிரூபணம் என்பது பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

1. வாகன சாரதியின் பெயர் விபரங்கள் உட்பட ஏனைய சாரதிகள் பெயர் பதியப்பட்டிருந்தால் அவர்களின் விபரங்கள் (All Listed Operators)

2. கடந்த ஆறு வருடத்தினுள் எதிர் கொண்ட நட்ட ஈடு கோரல்கள். (Prior Claims within the Preceding 6 Yers)

3. சாரதியின் சாரதி அனுமதிப்பத்திர தகமைகள் தொடர்பான பதிவுகள் (Dirving Record)

4. காப்புறுதி ஒப்பந்தம் வலிமையில் இருந்த காலம் (Dates the policy was in Force)

5. முன்னைய காப்புறுதி கம்பனிகளின் விபரங்களும் காப்புறுதி இலக்கமும் (Previous Carrier & Policy number)

6. தற்போது உள்ள நிலைமை / ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதற்கான காரணம் (Current Status / Reason Policy was cancelled)

அதாவது கனடாவில் சி.ஜி.ஐ நிறுவனத்தில் பதிந்து இருக்கும் 'ஆட்டோ பிளஸ் அறிக்கை' யில் உள்ளது போன்ற தகவல்கள் ஏனைய நாடுகளில் இருந்து வரும் காப்புறுதி அறிக்கைகளிலும் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகவல்கள் அந்த நாட்டின் காப்புறுதி கம்பனியின் உத்தியோக பூர்வமான கடித தாளில் (Company Official Letter Head) எழுதப்பட்டு, அதிகாரமுள்ள அக்கம்பனிப் பிரதிநிதியால் கைச்சாத்திடப்பட்டு இருத்தல் வேண்டும். அவ் அறிக்கையின் மூலப்பிரதி இங்கு கனடாவின் காப்புறுதி கம்பனிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

இவை தமிழ் மொழி உட்பட வேறு மொழியில் இருந்தால் இது கனடாவில் அதிகார பூர்வமாக மொழி பெயர்க்கப்பட்டு அத்தாட்சிபடுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

சில நேரங்களில் இத்தகைய ஏனைய நாடுகளில் உள்ள வாகன காப்புறுதி அனுபவங்கள், கடிதங்கள் மோசடியாகவோ அல்லது போலியானதாகவோ இல்லை என்பது கனடாவில் உள்ள அந்தந்த நாட்டு தூதரா-லயத்தினால் அல்லது பல்வேறு நகரங்களிலும் உள்ள அந்நாட்டு தூதராலய பிரதிநிதிகள் அலுவலகத்தினால் (Consulator's Office) உறுதிப்படுத்தி, அத்தாட்சிப்படுத்திக்கொண்டு வருமாறும் கேட்கப்படுவதும் வழமையாகும். 'விபத்துகள், நட்டஈடு கோரல்கள் அனுபவம்' (Proof of claims free Experience) என்பதனை கனடாவில் பொதுவாக "ஸ்ரார்" (Star) என்றும் ஒரு குறியீட்டில் குறிப்பிடப்படுவது வழமையாகும்.

மூன்று வருடங்கள் இவ் விபத்துகள் நட்டஈடு கோரல் அனுபவம் எதுவும் எதிர் கொள்ளவில்லையானால் இதனை 'மூன்று ஸ்ரார்' பதிவுகள் உள்ள தகைமையில் குறிப்பிடப்படும். இவ் நிலமை 'ஆறு ஸ்ரார்' என்னும் நிலைமையில் இருந்தால் மாதா மாதம் காப்புறுதிக்கு செலுத்தும் விலை என்பது மிக சாதகமாக அமைந்துவிடும். திடீர் என தப்புக்கு உரிய ஒரு விபத்தினை எதிர் கொண்டால் இவ் ஸ்ரார் பதிவுகள் என்பது பூச்சியம் (Zero Star) என்ற நிலமைக்கு திடீரென தலைகீழாக மாறும் நிலமை உருவாகும் போது இது விலையில் பாதகமான நிலைமையே உருவாக்கி விடும்.

இங்கு ஏனைய நாடுகளில் விபத்துகள் நட்டஈடு கோரல் அனுபவம் என இல்லாது முதன் முறையாக கனடாவில் வாகன காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது, அது எதுவிதமான ஸ்ரார்களும் இல்லாது ஆரம்ப நிலையில் இருந்து தொடங்குவது போன்று கருதப்படும். அதாவது "ஸ்ரார்" என்பது பூச்சியமாக கருத்தில் கொள்ளப்படும். இந்நிலையில் மாதம் செலுத்தும் விலையென்பது சாதகமாக எந்த நிலையிலும் இருக்க மாட்டாது.



**New Home Warranty Inspections**

**Pre-purchase Home Inspections**

*Nalliah Thayabharan BSSO CMI CEI RHI*

Building Science Specialist of Ontario®

Certified Master Inspector®

Registered Home Inspector®

*Building Experts Canada Ltd*

*416 332 1743 / www.buildingexperts.ca*

**வருமான வரி மீள்வு**

***Income Tax Refund***



- தனிப்பட்ட குடும்பத்தினரின் வருமான வரி மீள்வும் எதிர்கால ஆலோசனைகளும்
- தனியாக தொழில் முயற்சியில் ஈடுபடுவோரின் வரிப்பத்திரம் தயாரிப்பதும் எதிர்கால ஆலோசனைகளும்
- வாடகை வருமான செலவுகளுக்கான (வீட்டின் ஒரு பகுதியோ, முழுமையாகவோ) வரி மீள்வு சேவை

**உதயன் ஐயாத்துரை Tel.: 416.999.3555**

***Commercial Building Inspections***

**Environmental Assessments** Phase I, II & III

Specializing in Commercial Malls, Motels & Gas Stations

***Building Experts Canada Ltd***

***Tel.416 332 1743 / Fax 416 754 7032***

***www.buildingexperts.ca***

# ‘நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்’’

## மூலிகைப்பொருட்கள் இரச குணவீரிய விபாங்களுக்கு (தன்மைகளுக்கு ) ஏற்ப வியாதிகளைக் குணமாக்கும்

**வெங்காயம் -** இதன் தாவரவியல் பெயர் Allium Cepa ஆகும். இதில் பயன்படுவது பூ, தாள், விதை, கிழங்கு என்பனவாகும். சீதவீரியத்துடன் சற்றுக் காரமுடையது.

சமையல் செய்யும் போது அதிகம் பாவிப்பது வெங்காயமாகும். இதன் மணமும் சுவையும் தரம் வாய்ந்தவை. இதில் சிறு வெங்காயம், நாட்டு வெங்காயம் சிறப்பு வாய்ந்தவை. சிவப்பு நிறம் கொண்டதாகவும் இருக்கும். நாட்டு வெங்காயம் எனக் கூறப்படும் பெரிய வெங்காயம் ஓரளவு காரம் குறைந்ததாகக் காணப்படும். இதில் கூறப்படுகின்ற வெங்காயங்கள் நோயைத் தீர்க்கக்கூடிய அரும் மூலிகைப்பொருள்களாகும். இதனை ஒரு சர்வரோக நிவாரணியாகவும் கூறலாம்.

மேலும் சிகரெட் பாவித்து வருவோர் பெரும்பாலும் வெங்காயத்தை பச்சையாகமென்று வருவது சாலச் சிறந்தது. இதனால் புகைத்தன்மையால் ஏற்படுகின்ற விஷத்தன்மை மாறிக் கொண்டு வரும்.

வெங்காயத்தில் உள்ள ‘அலெல் சல்பைடு’, வியாதியை ஏற்படுத்துகின்ற பக்ரீயாக்களையும், நச்சு வைரஸ்களையும் அழிக்கக்கூடிய சக்திவாய்ந்தது. வெங்காயத்தில் இரண்டறக் கலந்துள்ள கெந்தக மூலப் பொருளான திரவம் நமது கண்களில் படும்போது எரிவுத்தன்மையை ஏற்படுத்தி கண்ணீரைச் சொரியச் செய்கின்றது. இதனை நாம் நன்கு அறிவோம்.

எனவே பலதன்மை படைத்த வெங்காயத்தின் சிறப்பின் மேலும் சற்று ஆராய்வோம்.
வெங்காயத்துடன் மிளகுப்பொடி அல்லது மிளகு சேர்த்துப் பாவித்தால் சுரம் தணிவடையும். வெங்காயத்தை எடுத்து துப்பரவு செய்து கசாயம் ஆக்கிப் பாவித்துவர உஸ்ணத்தன்மை நீர்க்கடுப்பு (சிறுநீர்) அழற்சி அகன்று விடும்.
வெங்காயம் பூவை எடுத்து சுண்டிச் சாப்பிட குன்மம் என்று சொல்லப்படும் வியாதி மாறிவரும். உடம்பின் வெப்பு வெட்டை நீங்குவதற்கு வெங்காயத்தை எடுத்து துப்பரவு செய்து தோலை நன்கு உரித்து பின் அவற்றை நன்கு கழுவி சிறிது நற்சீரகம் சேர்த்து நன்கு அரைத்து எடுத்து பின்பு பசுப்பாலை ஓரளவு எடுத்துக் காய்ச்சி அதனுள் அரைத்தவற்றை இட்டு நன்கு கலக்கி காலை வேளை சாப்பாட்டிற்கு முன்குடிக்க மேல்கூறிய வியாதி குணமடையும். இப்படி ஒருகிழமை பாவித்துவர வேண்டும்.

நீரிழிவு (Diabetes) உள்ளோருக்கு மூலரோகம் இருந்தால் வெங்காயத்தை நன்கு துப்பரவு செய்து சிறு துண்டுகளாக எடுத்து நெய்யில் வதக்கிப் பனங்கற்கண்டு சேர்த்து உண்டுவர மூலநோய் மாறிக்கொண்டுவருவதைக் காணக்கூடியதாக இருக்கும்.

மேலும் சிலருக்கு இரத்த நாடிகளில் இரத்தம் உறைந்து கட்டியாகும். தன்மை ஏற்படும். இந்நிலை ஏற்படாது பாதுகாக்க வெங்காயத்தை உணவுடன் சேர்த்து பாவித்துவந்தால் நன்மையைத் தரும்.

வெங்காயம் வீரிய சக்தியையும், வெப்பத்தையும் தூண்டி யோகத்தை விருத்தி செய்யும் தன்மை உண்டு. வாத உபத்திரவங்களை போக்கும் பித்தத்தைத் தூண்டக்கூடியது. கபத்தன்மையை (சளி) வலுவூட்டும். மேலும் பற்கள் சம்பந்தமான வியாதிகளைப் போக்குவதற்கு வெங்காயத்தை எடுத்து மென்று சிறுவேளை வாயில் வைத்திருக்கக்குணம் காட்டும். சின்னவெங்காயம் பலனளிக்கும்.

வெங்காயத்தை துப்பரவு செய்து சிறுதுண்டாக வெட்டி போத்தலில் இட்டு வினிகரும் சேர்த்து வைக்கப் பழுது போகாமல் இருக்கும்.

காலை உணவுடன் வெங்காயத்தை நன்கு அவித்துச் சாப்பிட்டு வந்தால் இருதயவியாதி நாளடைவில் குறைவு ஏற்பட்டு நற்சுகமடைவீர். முத்தாது என்கின்ற வாதம், பித்தம், கபம் என்பவற்றில் பித்தம் விகாரப்பட்டு அதிகரிப்பு நிலை ஏற்பட்டு வாயும் கசப்புடன் காணப்படும் போது வெங்காயத்தை எடுத்து துப்பரவு செய்து வெல்லத்துடன் சேர்த்து சாப்பிட்டு வரக்குணம் கிடைக்கும். (வெந்நீரும் ஓரளவு பாவிக்கவும்)



தலையில் உள்ள மயிர் கொட்டி தலைப்பகுதியில் சில இடங்களில் வழுக்கை ஏற்பட்டுச் சுட்டியாகக் காணப்பட்டால் சின்ன வெங்காயத்தை எடுத்து நன்கு தோல் நீக்கி துப்பரவு செய்து மேல் மொட்டை நீக்கி உரிய இடத்தில் நாளாந்தம் உரைஞ்சி தேய்த்து வர கொட்டிய மயிர் முளைக்கும். நரைத்தன்மை இருந்தாலும் மாற்றும் தன்மையாகும். வெங்காயம் நமது தேகத்தில் உள்ள எலும்புகளுக்கும் சக்தியைக் கொடுக்கக் கூடியது.

பெரும்பாலும் குஷ்டம், குன்மம், மேகநீர் வியாதி, வலிப்பு நோய், மூலரோகம், ஜலதோஷம் தொற்று நோய் யாவற்றுக்கும் வெங்காயம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

வெங்காயத்தை உலகமக்கள் எல்லோரும் விருப்புடன் பாவித்து வருகின்றார்கள். இதனை எங்கும் பெற்றுக் கொள்ள முடியும். இதில் புரதச்சத்து இல்லாவிட்டாலும் காரம், மணம் ஜீவசக்தி இருப்பதினால் அனைவரும் விரும்பிய பாவித்துவருகின்றார்கள்.

காசநோய் உள்ளவர்களும் வெங்காயத்தை உணவுடன் பாவித்து வந்தால் நாளடைவில் படிவு ஏற்பட்டு சுகம் கிடைத்து விடும்.

வெங்காயப் பதார்த்த உணவு இருதயத்தில் இருந்து வெளிப்படும் இரத்தோட்டதை துரிதப்படுத்தி வலுவடையச் செய்யும்.

பெரும்பாலும் பாலைவன வெப்பு நாடுகளில் வெங்காயம் பல வழிகளிலும் பயன் கொடுத்து வருகின்றது. தண்ணீர் கிடைக்காத நாவரட்சி ஏற்படும் போது இதனை பாவித்து நன்மை பெறுகின்றார்கள். உ+ம் அரபு நாடுகள் பாலை-வன நாடுகளாகும். தூரப்பயணம் செல்லும்போதும் வெங்காயத்தை எடுத்துச் செல்வது நடைமுறையில் உண்டு. தண்ணீர்தாகம் மற்றும் சில வியாதிகள் ஏற்படும் போது இதனை பயன் படுத்துவார்கள்.

மேலும் சிற்றின்ப உணர்ச்சியை ஊக்குவிக்கும் தன்மை இதற்குண்டு. வெங்காயம் ஒரு கிருமி நாசினியாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

ஒருவருக்கு தொற்று நோய் ஏதும் ஏற்பட்டிருந்தால் உ+ம் அம்மை, கொப்பளிப்பான் போன்றவை. அவர்கள் தங்கியுள்ள இடத்தில் வெங்காயத்தை உடைத்து போட்டால் கிருமிகள் வந்து தாக்காதபடி எதிர்த்தாக்கும் வன்மை படைத்தது.

தேங்காய் எண்ணெயில் வெங்காயத்தைப் பொரித்து எடுத்து எண்ணெய் எடுத்து காயங்களுக்கும், புண்களுக்கும் பூசிவர காய்ந்து குணம் கிடைக்கும்.

வயது முதிர்ந்தவர்கள் சிலருக்கு உடல் தளர்ச்சி ஏற்படுவது உண்டு. இவர்கள் வெங்காயத்தை சாப்பிடும் போது பாவித்து வந்தால் நாளடைவில் குணம் கிடைத்து விடும். இரத்த அமுக்கம் (Blood Pressure இருந்தாலும் சமநிலைக்கு வந்து விடும். உணவு வகைச் சப்பாத்தி தயாரிக்கும் போது வெங்காயம் + தக்காளிப்பழம் சேர்த்து பாகம் செய்து சாப்பிட்டுவர அதனால் உடல் நிலை தளர்வடையாமல் காணப்படும்.

வெங்காயம் அதிகம் பாவித்து வருபவர்களுக்கு தூக்கம் அதிகம் காணப்படும். படுக்கை அறைகள், வீடு என்பவற்றில் வெங்காயத்தை நறுக்கி துண்டுகளைப் போட்டு விட்டால் விசப்பாம்பு, தேள் போன்றவை உள்ளே நுழையாது பாதுகாத்துக் கொள்ளும்.

தொற்றுகளினால் ஏற்படும் சின்னமுத்து, கொப்புளிப்பான் அம்மை போன்ற வியாதி உடையவர்களுக்கு அவர்களின் வெப்பநிலையை சமப்படுத்த வெங்காயம் சேர்ந்த குளிர் பானங்களையும், ஆகாரங்களையும் முக்கியமாகக் கொடுப்பதுண்டு.

மேக நோய் உள்ளவர்களும் வெங்காயத்தை தினமும் பாவித்து வருவதினால் நன்மை உண்டு. சித்த ஆயுர் வேத வைத்தியர்கள் முறைப்படி வெங்காய லேகியம் தயாரித்து மேக நோய் ஏற்பட்டோருக்கு கொடுத்து பலரைக் குணப்படுத்தியுள்ளார்கள். இதனை பெரும்பாலும் மூன்று நான்கு கிழமைகள் பாவித்துவர வேண்டும். எதற்கும் வைத்தியர்களின் ஆலோசனை முக்கியமாகும். மரக்கறி உணவுகளே பாவிக்க வேண்டும்.

வெங்காயத்தில் கொழுப்புச் சத்து கிடையாது. எனவே வெங்காயவடை, வெங்காயசம்பல், வெங்காய தோசை, வெங்காயச் சட்டினி இப்படியான உணவு வகைகளை இடைஇடை சாப்பிட்டு வருவதினால் உடல் நிலையில் ஒருவகை தென்பும், மகிழ்ச்சியும் ஏற்பட்டு சுகத்துடன் வாழமுடியும்.

சீதத்துடன் பேதிநிலை காணப்பட்டால் வெங்காயச் சாற்றுடன் தேன் சேர்த்துக் கொடுத்து வர பூரண சுகம் கிடைக்கும். இதற்கு வைத்தியர்கள் நோயை நன்கு நிர்ணயிக்க வேண்டும். சிறுநீரகத்தில் கல் ஏற்பட்டு உபத்திரவம் இருந்தாலும் கூட்டுச்சரக்குகளோடு வெங்காயமும் சேருவதினால் கற்களைக் கரைத்துச் சிறுநீருடன் வெளியேறி விடும்.

கண்களில் மங்கல் தன்மை ஏற்படும்போது வெங்காயப்பூவை எடுத்து வந்து துப்பரவு செய்து கழுவி காலைவேளை சாப்பிடமுன் பாவித்து வர மங்கிய தன்மை அகன்று விடும். 3 நாட்கள் பாவித்துவந்தால் போதும். குளிர்ச்சி கண்களில் ஏற்படுவதுடன் பார்வையும் தெளிவாகும்.

ஆண்மைத் தன்மை இன்றி காணப்பட்டால் ஒவ்வொருநாளும் வெங்காயத்தை எடுத்து அதாவது (சின்ன வெங்காயம்) துப்பரவு செய்து சிறுதுண்டுகளாக வெட்டி தேனில் ஊறவிட்டு பாவித்து வந்தால் பூரண பயன் கிட்டும்.

மூலச்சூடு தணிவடைய வெங்காயப்பூ வெங்காயத்தாள் இவைகளை நாளாந்த உணவு உட்கொள்ளும் போது பாகம் செய்து பாவித்துவர யாவும் அகன்று விடும்.

எனவே என்றும் நோய் நொடியின்றி சுகமுடன் வாழ வெங்காயத்தைப் பச்சையாகவோ அல்லது பாகம் செய்தோ, உணவுடன் சாப்பிட்டு வரவேண்டும் என கூறிக்கொள்ளுகின்றேன்.

இந்த மூலிகைவர்க்கத்தில் உள்ள வெங்காயம் என்றும் எங்கும் இலகுவாகப் பெறக்கூடியதாக உள்ளது.



**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013






**YOGA - MEDITATION CLASSLESS**

**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



தொடர்புகுகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***
***Etobicoke, Woodbridge, Brampton - Harani - 416.270.1687***

# GTA SquareMall வழங்கும்

# அதிரடி மலிவு விற்பனை

## February 28, சனிக்கிழமையும், March 1,2009 ஞாயிற்றுக்கிழமையும்

**Middlefield & Finch** சந்திப்பில் 5215 **Finch ave East** இல் அமைந்திருக்கும்
**GTA Square Indoor South Asian Mall** இல் அமைந்திருக்கும் 50 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்களின் ஒருங்கிணைந்த அதிரடி மலிவு விற்பனை.

30% முதல் 70% வீத தள்ளுபடி விலை. அத்துடன் இலவச கூப்பன்கள், அதிஸ்ட லாபச் சீட்டுக்கள் என பல தரப்பட்ட விடயங்கள். குடும்பத்துடன் விரைந்து வாருங்கள்.

அத்துடன் **February 28,** சனிக்கிழமையும், **March 1,2009** ஞாயிற்றுக்கிழமையும், பிற்பகல் 2.30 முதல் 6.00 மணிவரை **CMR, TVI** இன் நீங்கள் கேட்கலாம் நேரடி ஒலிபரப்பும் நடைபெறும்.




# உங்கள் எதிர்காலம் இந்த ஏட்டில் இருக்கலாம்!

## வைத்தீஸ்வரன் கோயில் - தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 54

உங்களுக்கு கிளி ஜோதிடம், கைரேகை பார்த்தல், ஜாதகம் கணித்தல் போன்றவைகளில் நம்பிக்கை இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். ஆனால், நிச்சயம் வாழ்வில் ஒரு முறையாவது, "அப்படி என்னதான் இதில் இருக்கிறது எனப் பார்த்துவிடுவோமே" என்று கிளி எடுத்துப்போடும் சீட்டுகளைப் பார்த்துக் கொண்டு காத்திருந்திருப்பீர்கள் அல்லது கையை ஜோதிடக்காரர்கள் முன்னால் நீட்டி அவர்கள் சொல்லுவதை உற்று கேட்டிருப்பீர்கள். குறிப்பாக, சுற்றுலா செல்லும் இடங்களில் இதைச் செய்பவர்கள் அதிகம். சரி இதையே கொஞ்சம் மாற்றி ஜோதிடம் பார்ப்பதற்காகவே ஒரு சுற்றுலா சென்றால் எப்படி இருக்கும்? வைத்தீஸ்வரன் கோயில் வந்து பாருங்கள். அங்கு கேட்பவற்றிலும் பார்ப்பவற்றிலும் மலைத்து விடுவீர்கள். ஆம், வைத்தீஸ்வரன் கோயில் நாடி ஜோதிடம் மிகவும் வித்தியாசமான ஓர் அனுபவம். ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு அது ஒரு மறுபிறவி.

தமிழகத்தில் மாயவரத்திலிருந்து சிதம்பரம் செல்லும் ரயில் பாதையில் நான்காவது ரயில் நிலையில் உள்ளது, வைத்தீஸ்வரன் கோயில். நாடி ஜோதிடம் தவிர, இங்குள்ள கோயிலும் மிக விசேடமானது. நாம், நாடி ஜோதிடத்தைப் பற்றி பார்ப்பதற்கு முன்னால், முதலில் வைத்தீஸ்வரன் கோயிலில் சாமி கும்பிட்டுவிட்டு வந்துவிடுவோம்.

முற்காலத்தில் இருந்தே தமிழர்கள் செவ்வாய்க் கிரகத்தைக் கடவுளாக வழிபட்டு வந்திருக்கின்றனர். செவ்வாயை வணங்கினால் தைரியமும் அரச சபையில் பேசும் ஆற்றலும்



போரில் வெற்றியும் கிடைக்கும் என்பது மக்கள் நம்பிக்கை. இதனால், செவ்வாய் என்று குறிப்பிடப்படும் அங்காரக பகவான் பூசித்த தலங்கள் என நம்பப்படுபவை முக்கியமான வழிபாட்டு தலங்களாக பிரசித்திபெற்று விளங்கின. அவற்றுள் குறிப்பிடத்தக்கது திருப்புள்ளிருக்கு வேளூர் எனப்படும் பாடல் பெற்ற தலம். இவ்வூர்தான் இன்று வைத்தீஸ்வரன் கோயில் என்று அழைக்கப்பெறுகின்றது. சோழ வளநாட்டில் தஞ்சை மாவட்டத்தில் காவிரியின் வடகரைத் தலங்களில் 16வது தலமாக உள்ளது வைத்தீஸ்வரன் கோயில். திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் வணங்கி வழிப்பட்டு, இத்தலத்தைப் பற்றி தேவாரப் பதிகங்களைப் பாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. கோளிலித்தலம், வினைதீர்த்தான் கோயில், தையல்நாயகி கோயில் மற்றும் வழக்கில் உள்ள வைத்தீஸ்வரன் கோயில் எனப் பல பெயர்கள் இதற்கு உண்டு. அங்காரகனின் செங்குஷ்ட நோயைத் தீர்த்தபடியால் இது அங்காரகத் தலமாகவும் ஆகின்றது.

நான்கு கோபுரங்களுடன் உயர்ந்த மதில்களும் கொண்டது வைத்தீஸ்வரன் கோயில். இங்குள்ள இறைவனின் பெயர் ஸ்ரீ வைத்தியநாதர். மேற்கு நோக்கி இவரது சந்நிதி உள்ளது. அம்பாள் பெயர் ஸ்ரீ தையல்நாயகி. இவளது சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. முருகப்பெருமான், செல்வமுத்துக் குமரன் எனும் பெயரோடு இந்தக் கோயிலில் விளங்குகின்றார். நவக்கிரகங்கள் வக்கிரமில்லாமல் வரிசையாக ஈஸ்வரன் சந்நிதிக்கு பின்புறம் நோய்கள் தீர வேண்டி பிரார்த்தித்திருக்கும் காட்சியை இங்கு காணலாம். மூல விக்கிரகத்தோடு உற்சவ விக்கிரகமான அங்காரகனுக்கு உள்ள ஒரு சந்நிதி தவிர அங்காரகனுக்கு என்று தனியாகவும் ஒரு சந்நிதி உள்ளது. நவக்கிரகங்களுக்கு அடுத்தாற் போல் 63 நாயன்மார்களும் ஸப்த கன்னியரும் ஆயுர்வேதத்தின் தலைவனான தன்வந்திரி சித்தர் விஷ்ணுவும் ஸ்வரூபத்தில் அமர்ந்திருக்கும் காட்சி அற்புதமாக இருக்கும். இங்குள்ள துர்க்கை மற்றும் சஹஸ்ர லிங்கமும் விசேஷமானவை.

செவ்வாய் ஸ்தலம் என்பதால், செவ்வாயின் அதிபதியான முருகனுக்கு வைத்தீஸ்வரன் கோயிலில் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. செல்வமுத்துக் குமாரஸ்வாமி என்ற திருப்பெயரில் இங்கு எழுந்தருளி இருக்கும் முருகனை பக்தர்களும் தொண்டர்களும் செல்லமாக முத்தையா என்றே அழைக்கின்றனர். வைத்தீஸ்வரன் கோயில் முருகனைத் துதித்துப் பாடிய புலவர் குமரகுருபர ஸ்வாமிகள், "முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ்" என்னும் பிள்ளைத் தமிழ் நூல் ஒன்றைப் பாடியுள்ளார். இந்தத் தெய்வீக தமிழ்ப் பிரபந்தத்தை பக்தி சிரத்தையுடன் தவறாது ஓதும் அன்பர்கள் முருகனின் பேருளைப் பெற்று சிறப்படைவர் என்பது நம்பிக்கை. சூரபத்மனை வெல்ல முருகன் வேல் வாங்கிய தலம் இது இதன் தனிச்சிறப்பு.

இங்குள்ள ஜடாயு குண்டமும் பிரசித்திபெற்றது. சீதையை இராவணன் சிறையெடுத்துச் சென்றபோது, அதனைத் தடுத்த ஜடாயுவின் சிறகுகளை இராவணன் வெட்டி வீழ்த்தினான். இராமன் அவ்வழியே சீதையைத் தேடி வருவது வரைக்கும் காத்திருந்த ஜடாயு, ராமனிடம் நடந்தவற்றைச் சொல்லி அவனது காலடியிலேயே உயிர்த துறந்தான். ஜடாயுவின் வேண்டுகோள்படி சிதையடுக்கி அவனது உடலை இராமபிரான் தகனம் செய்த இடம்தான் 'ஜடாயு குண்டம்' என்று அழைக்கப் பெறுகின்றது. இன்றும் இக்குண்டத்தில் உள்ள திருநீற்றினை அணிந்தால் தீராத நோய்களும் தீரும் எனும் நம்பிக்கை உண்டு. ஜடாயு குண்டத்திற்கு அருகில் ஜடாயு மோட்சத்தைச் சிலை வடிவில் வடித்திருக்கிறார்கள். இங்கு ஜடாயு உற்சவ மூர்த்தியாகவும் இருக்கின்றார். கோயிலின் கிழக்குக் கோபுர வாயிலில் உள்ள வேம்புதான் தல விருட்சமாகும். இதனை 'வேம்படிமால்' என்கின்றனர். ஆதிவைத்தியநாதபுரம் இதுதான் என்கிறார்கள்.


வைத்தீஸ்வரன் கோயிலுக்குள் உள்ள சித்தாமிர்த்த தீர்த்தம் மிக விசேஷமானது. நான்கு புறங்களிலும் மண்டபத்தோடும் படிக்கட்டுகளோடும் நடுவில் நீராழி மண்டபத்தோடும் இந்த தீர்த்தம் விளங்குகின்றது. இங்கே, கிருத யுகத்தில் காமதேனு, இறைவனைத் தன் முலைப்பால் கொண்டு திருமஞ்சனம் ஆட்டிய சம்பவம் நிகழ்ந்தது. அதுவே புனித தீர்த்தமாக பெருகியது என்பது ஐதீகம். இதன் காரணமாக கோகஷீர தீர்த்தம் என்று பெயரும் இதற்கு உண்டு. சதானந்த முனிவர் இங்கு தவம் செய்து கொண்டிருந்த போது, பாம்பால் துரத்தப்பட்ட தவளை ஒன்று தண்ணீரில் குதித்து அவர் தவத்தை கலைத்தது. இதனால் கோபம்கொண்ட முனிவர் குளத்தில் பாம்பும் தவளையும் வாசஞ் செய்யக்கூடாது என்று சபித்ததால் இக்குளத்தில் தவளைகள் வசிப்பதில்லை என்பர். இத்திருக்குளத்தில் குளித்தெழுந்தால் சகல நோய்களும் தீரும் என்பது இன்றும் நிலவும் நம்பிக்கை. நோய்தீரக் குளத்தில் வெல்லம் கரைத்து விடுவதும், பிரகாரத்தில் உள்ள மரப்பெட்டியில் உப்பு, மிளகு இரண்டையும் கலந்து கொட்டுவதும் இன்றும் உள்ள ஒரு பிராத்தனை வழக்கம். சித்தாமிர்த்த தீர்த்தம் தவிர கோதண்ட தீர்த்தம், கௌதம தீர்த்தம், வில்வ தீர்த்தம், அங்கசந்தனத் தீர்த்தம், முனிவர் தீர்த்தம் என்று வேறு பல தீர்த்தங்களும் இந்தக் கோயிலில் உள்ளன.

வைத்தீஸ்வரன் கோயிலில் நாள்தோறும் 6 கால பூஜைகள் நடைபெறுகிறது. பங்குனியில் பிரம்மோற்சவம் நடைபெறும். அதில் ஐந்தாவது நாளன்று செல்வமுத்துக்குமரன் வைத்தியநாதரை ப்பூசித்துச் செண்டு பெறும் காட்சி மிக அற்புதமான ஒன்று. உற்சவகாலத்தில் கயிலையில் சோமாஸ்கந்தர் எழுந்தருளியிருப்பது போல் சுவாமி ஒரு புறமும், அம்பாள் ஒரு புறமுமாக எழுந்தருள, செல்வமுத்துக்குமார சுவாமி நடுவில் எழுந்தருள்வார். மாதந்தோறும் வரும் கார்த்திகை விழாவும் இங்கு சிறப்பானது. இந்நாளில் செல்வமுத்துக்குமார சுவாமிக்கு நடைபெறும் அபிஷேக ஆராதனைகளைத் தரிசிக்க மக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடுவர். அபிஷேகங்களில் சந்தன அபிஷேகம் மிகவும் சிறப்புடையது. அங்காரக ஷேத்திரமாதலால் செவ்வாய்க் கிழமைகளில் அங்காரகர் பிரகாரத்தில் வலம் வருவார். இது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இத்தலம் சார்ந்து மக்களிடையே இருக்கும் நம்பிக்கைகள் பல. ஊழ்வினைகளையும் 448 நோய்களையும் தீர்க்கவல்லவராய் வைத்தீஸ்வரன் கோயிலில் எழுந்தருளியுள்ளார் வைத்தியநாதர் என்பது அதில் முதலானது. வைத்தியநாதனைப் போற்றி எழுவாருக்கு அவனே மந்திரமும் மருந்துமாகித் தீராத நோய் தீர்த்து வைப்பான். பிறவிப் பெரும்பயனையும் தேடித்தருவான் என்பது நம்பிக்கை. அவருக்கு உதவியாய் அம்பாள் கையில் தைல பாத்திரமும் அமிர்த சஞ்சீவியும் வில்வமரத்தடி மண்ணும் ஏந்தி வர, இருவரும் தீராத நோய்களையும்

தொடர்ச்சி 22ஆம் பக்கம்









24 Hours Guaraanteed Results

# Mother Siddhi

3 Reading $20

## Find the answer to your unsolved problems. Don't suffer in silence

உண்மையான ஆன்மீக பரிகாரி - 20 வருட அனுபவம் கொண்டவர் (Genuine spiritual healer)

## Psychic Clairvoyant Medium

**Genuine Spiritual Healer**
**Marabout of International Fame - 20 year's Experience**
**A Great Healer in Natural Medicine.**
**Born Gifted with Spiritual Power**


- No matter what your problems are, I can help you solve them by using holy spirit and the most powerful spell.
- Love/relationship problems, family problems. marriage (reunion or separation),
- Parents having difficulties with children, health problems, court cases or immigration.
- To have good success in exam, job or business, infertility or sterility and sexual problems.
- If you are suffering from unknown illness and pain inside your body, I can remove it within few days.
- Cure your alcoholism, drug addiction & energy weakness.
- I will protect you from all enemies and any bad obstacles that are blocking your success.
- If spouse walk out of your life, I can reunite and give love and fertility between you for ever and help find the right lover and success.

## தனிமையில் வாடாதீகள்.

பிரச்சினை எதுவானாலும் தீர்வுகாணலாம்.
(புனித ஆவி மற்றும் மந்திர வலிமையுடன்)


- புனித ஆவியின் துணையுடன் உங்கள் பிரச்சினை எதுவாயிருந்தாலும் தீர்வுகாண என்னால் உதவ முடியும்.
- காதலில் தோல்வியா? குடும்ப உறவில் விரிசலா? திருமண முறிவா? பாலியலில் பிரச்சினையா? அதில் நாட்டமின்மையா? தீர்த்துவைக்க முடியும்.
- சேய்களுடன் பெற்றோர்க்கு பிரச்சினையா?
- குடிவரவு அல்லது வழக்கில் பின்னடைவா?
- ஆரோக்கிய நலிவா?
- பரீட்சையில், வியாபாரத்தில், உத்தியோகத்தில் ஏற்றம் காணவேண்டுமா?
- குடி அல்லது போதை பழக்கத்திலிருந்து மீள வேண்டுமா?
- நிர்ணயம் செய்ய முடியாத நோயா?
- புரியாத உடல் வலியா உடல் வலிமையின்மையா?
- பகைவர்களிடமிருந்தும், வெற்றியை பாதையில் உள்ள தடைகளை நீக்கி பாதுகாப்பு அளிக்க என்னால் இயலும்.
- வாழ்க்கை துணை பிரிந்து போயிருந்தால் புதிய காதல் வாழ்வு ஆரம்பிக்கும் வகையில் மீளவும் சேர்த்து வைக்க முடியும்.
- இயற்கை வைத்தியத்தில் கைதேர்ந்தவர்.

- **ஆன்மீக சக்தியுடன் கூடவே பிறந்தவர்**
- **இயற்கை வைத்தியத்தில் கைதேர்ந்தவர்**




***Palm, Tarot Card, Crystal Ball Reading Advisor. Tells the past, present & future.***
***I can succeed where others have failed***

**Call : 416-283-1088**
**8871 Sheppard Ave.**
**East at morningside**
**You can see me by appointment only**



# பிரிவைப் பெரிதுபடுத்தும் பெணம் மனம்

மனித உயிர்கள் மட்டுமன்றி மற்றுள உயிர்களும் காதல் உணர்வில் திளைப்பது இயற்கை. சிறப்பு உயிரி எனப்படும் மனிதனை விட ஐந்தறிவு உயிர்களும் காதலில் திளைத்ததை கவிஞர்கள் காட்டியுள்ளனர். கவிஞர் தீட்டிய சொல் ஓவியம் இதுதான்.

திருநறையூர் என்னும் அழகிய சிற்றூரில் உள்ள பொய்கைகளில் தாமரையும் அல்லியும் மலர்ந்திருந்தன. அல்லிமலர் ஒன்றில் ஒரு நண்டு தம்பதி வாழ்ந்து வந்தது. ஆணுக்கு பகவாய் அலவன் என்றும் பெண்ணுக்கு நள்ளி என்றும் பெயர்.

நள்ளி கருவுற்று இருந்தது. அந்நிலையில் நல்ல பரிசு ஒன்றை கொடுத்து மகிழ்விக்க விரும்பியது ஆண் நண்டு. அல்லி மலரில் குடித்தனம் செய்வதால் அதன் மகரந்தப் பொடி அவளுக்கு அலுத்துப் போயிருக்கும். ஆகவே அருகில் பூத்திருக்கும் தாமரையின் மகரந்தத்தைக் கொணர்ந்து கொடுப்பேன் என்று காலையில் புறப்பட்டுச் சென்றது. அதனை கட்டுக்கடங்காத காதலின் பரிசு என்றும் கருதியது.

காலையில் மலர்ந்த தாமரை மலரில் நண்டு நுழைந்து அதன் பொடியை அளவுக்கு மீறி உண்டது. இதனால் மயக்க மடைந்து வெகுநேரம் அங்கு தங்கி விட்டது. பின்பு வீடு செல்லலாம் என்று பார்க்கும் பொழுது கதிரவன் மறைந்து விட்டதால் தாமரை மூடிவிட்டது. வெளியே வர இயலாமல் அந்தப் பொடி நிறைந்த மலரின் உட்புறத்தில் புரண்டு புரண்டு தப்பித்துச் செல்ல முயன்றது. உடலெல்லாம் தாமரையின் பொடி. வெளியே வரமுடியவில்லை. அடைபட்டு விட்டது.



பொழுது புலர்ந்தது. தாமரை மலர்ந்தது. அலவன் தாமரைப் பள்ளியினின்றும் வெளிக்கிளம்பி அல்லி மலராகிய தன் இல்லத்துக்கு தன் கைகளில் தாமரையின் மகரந்தத்தை ஏந்திய படி சென்றது. நள்ளி மிக மகிழ்வாள் என்று எண்ணியபடி சென்றது. ஆனால் நள்ளி சிறிதும் மகிழவில்லை. சினத்தை காட்டியபடி இரவெல்லாம் எங்கே போயிருந்தாய்.. தவிர உடலெல்லாம் ஏதோ பொடியை பூசிக் கொண்டு வந்திருக்கிறாய். பரத்தையின் தொடர்பு நன்றாய் தெரிகின்றது என்று நள்ளி சொல்லி கூறி கதவை அடைத்து விட்டு உள்ளே போய்விட்டது.

கதவை அடைத்தாள் என்றால் என்ன? கதிரவன் உதித்தவுடன் அல்லி மூடிக்கொள்ளும் தானே!

இயற்கையின் நியதியில் நடந்ததை நல்லியின் ஊடலாக காட்டியுள்ளார் கவிஞர். அலவன் நல்லதே செய்ய நள்ளி தவறாகப் புரிந்து கொண்டு ஊடல் செய்திருக்கின்றது. நள்ளி வெற்றி பெற்றதாக காட்டப்பட்டுள்ளது. இதற்கு காரணமும் உண்டு.

திருநறையூரில் அங்கு கோயில் கொண்டிருந்த பெருமானை விட பிராட்டிக்குத்தான் மதிப்பு அதிகம். எனவே அவ்வூரில் பெண்ணின் கை ஓங்கியிருந்தது. இது நள்ளியின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் பெண்ணின் தவிப்பும் பேசப்பட்டுள்ளது.

இளவேனிற்காலம் காதலர்க்கு இன்பம் தரும் காலம். அவர்கள் கூடி மகிழும் காலம். கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்து சென்று விட்டான். மாதவி கோவலன் மீது உயிரையே வைத்திருந்தாள். பரத்தை என்றாலும் கோவலனை அன்றி வேறு ஒருவரையும் அறியாதவள். எனவே அவன் பிரிவை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மாதவியினை மனம் மறுகுற்றதை இளங்கோ அடிகள் பின்வரும் பாடலில் நன்கு வர்ணித்துள்ளார்.

செந்தாமரை விரியத் தேமாங்கொழுந்து ஒழுக
மைந்தார் அசோகம் மடல் அவிழ - கொத்து ஆர்
இளவேனில் வந்ததால் என் ஆம் கொல் இன்று
வளவேல் நற்கண்ணி மனம்

இளவேனிற்காலம் பால் உணர்ச்சியை ஊக்குவிக்கும் காலம். இயற்கையே அதற்கு ஊக்குவிக்கும் எனலாம்.

ஐந்தறிவுடைய நண்டின் ஊடலும் ஆடல் மங்கை மாதவியின் வேதனையும் இங்கு காட்டப்பட்டுள்ளன. காதல் அன்பின் வேதனைகள் தீருவதில்லை. அது காதவழி சென்றாலும் மாறுவதில்லை என்பதையே இவை இரண்டும் எடுத்துக் காட்டுகின்றன.




**நா. க. சிவராமலிங்கம்**


**CHENNAI COTTAGE**

சென்னையில் குடும்பத்துடன் தங்குவதற்கும் விரும்பினால் சமையல் செய்து கொள்வதற்குமான வசதிகளுடன் கூடிய **Cottage.** விமான நிலைய போக்குவரத்து வசதிகள், சுற்றுலா வாகன வசதிகள், திருமண மண்டப ஒழுங்குகள், வீடு, நிலம் அரச அங்கீகாரத்துடன் வாங்குவதற்கான வசதிகளும் செய்து தரப்படும்.



416.356.1477
647.836.3440

# கால் (1/4) பங்கு முதலீடு

## ஓடும் நீர் உறைவதில்லை 79

இந்த உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்திற்கும் எந்தவிதமான ஏற்றத்தாழ்வுமின்றிச் சமமாகப் பகிரப்படுவது ஒன்றே ஒன்று தான். மனிதனாக இருந்தாலும் சரி, மிருகமாக இருந்தாலும் சரி எந்தவித வேறுபாடுகளும் இன்றி சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதும் இதுதான். அதாவது ஒவ்வொருநாளும் நாம் முற்றுமுழுதாகப் பயன்படுத்தக்கூடியதாகத் தரப்படுவதும் பெறுமதி கொடுக்க முடியாத அளவு அதி சிறந்ததாக அமைந்திருப்பதும் இதுதான். இதுவே 'நேரம்' எனப்படுகின்றது. நேரம் பற்றியும் அதன் பயன்பாடுபற்றியும் அவசியமாக அறிந்துகொள்ள வேண்டியதும் வாழ்க்கையில் நாம் நடைமுறைப் படுத்த வேண்டியதுமான முக்கிய விடயங்களைக் உங்களுடன் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நேரம் பொன்னானது என்கின்றோம். நேரம் பணத்திற்குச் சமமானது என்கிறோம். இந்த நேரம் பற்றிய ஒருவரவது தெளிவும் பயனும் அவரது வாழ்க்கைத் தீர்மானிக்கின்றதாகவும் அமைகின்றது என்பதும் நாம் அறிந்து கொள்ள வேண்டியதாகும்.

நேரமானது எந்தவித ஏற்றத்தாழ்வும் இன்றிச் சமமாகப் பகிரப்பட்டிருந்தாலும் சமூக பொருளாதார அடிப்படையில் பார்க்கும் போது அதி பெரும்பான்மையானவர்கள் பின்தங்கிய நிலையில் இருப்பதற்கான விளக்கமும் அவசியமாகின்றது. ஒருவரது வாழ்க்கைத் தரத்தை இன்னொருவருடன் ஒப்பிட்டு நாம் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தையா அல்லது தாழ்ந்த வாழ்க்கைத் தரத்தையா கொண்டுள்ளோம் என்பதை அளவிடுகின்றோம். இங்கு ஒருவருக்கு கொடுக்கப்பட்ட நேரமானது மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அளவாக இருப்பினும் சமூகரீதியான, பொருளாதார ரீதியான ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதற்கு அதன் பயன்பாடே அடிப்படையாக அமைகின்றது என்பது அதிபெரும் பான்மையானவர்களால் அறியப்படாதாக இருக்கின்றது.

இந்த நேரப்பகிர்வின் அதி உச்சமான பயன்பாடு என்பது விலங்கினங்கள், பறவைகள் என்பவற்றினால் அதாவது மனிதன் தவிர்ந்த ஏனைய உயிரினங்களினால் மிகவும் சிறப்பான முறையில் பயன்படுத்தப்படுகின்றது என்பதை நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். மிருகங்களின் நேரப்பயன்பாடுபற்றிய விடயங்களை நாம் அவதானிப்போமாயின் அவற்றினிடையே ஒரு சமநிலைப்படுத்தப்பட்ட வாழ்வியல் முறை ஒன்று இருப்பதைக் காணலாம். ஏனைய உயிரினங்கள் உழைப்பு, ஒத்துழைப்பு, ஓய்வு என்ற அடிப்படையில் தமது செயற்பாடுகளைப் பகிர்ந்தளித்துச் செயற்படுகின்றன. இந்த ஒழுங்குமுறையில் அவற்றின் வாழ்க்கையானது அழுத்தங்களுக்கு இடம் கொடுக்காமல் நகர்த்தப்படுகின்றது.

ஆனால் மனிதனைப் பொறுத்தவரையில் ஒரு சமநிலைப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறையை நகர்த்திச் செய்வது என்பது சவாலாக அமைந்து விடுகின்றது. இந்தச் சவாலை எதிர்நோக்கு வதற்கான தகுதியும் திறமையும் ஒவ்வொரு மனிதனிடமும் உண்டு. ஆனால் தம்மிடம் அந்தத் திறன் இருப்பதாகப் பெரும்பாலானவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. ஏனெனில் நமது நடவடிக்கை நம்மால் உருவாக்கப்படுவதாகவும் அதை நெறிப்படுத்துவதற்கான தகுதியுடையவர் களாக நாம் இருந்தும் கூட சவால்களுக்கு அடிமையாகி விடுகிறோம்.

'காலம்' என்பது நமது வாழ்க்கையின் ஆணிவேராகும். நாம் உயிர்வாழும் காலப்பகுதி எவ்வளவு என்பதை எம்மால் திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஆனால் நாம் வாழும் காலப்பகுதிக்குள் எப்படி வாழலாம் என்பதைத் தீர்மானிக்கும், நடைமுறைப்படுத்தும் திறன் மனிதனுக்கு மட்டுமே உண்டு. ஒரு மிருகத்தின் வாழ்வியல் முறையை நாம் அவதானிப்போமாயின் அது ஏற்கனவே நிரல்படுத்தப்பட்ட வழிமுறையைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் வாழ்கின்றது. அதாவது விலங்குகள் முன்கூட்டியே நிரல்படுத்தப்பட்ட (Pre Programmed) விடயங்களை இயல்பாகவே நடைமுறைப்படுத்து வதன் மூலம் வாழ்கின்றன. இதுவே அவைகளது வாழ்வியல் நகர்வாக அமைந்துவிடுகின்றது. மிருகங்கள் ஒரு பொழுதும் புதிதாக ஒன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்குரிய தகுதியை பெற்றிருப்பதில்லை. இதனால் அவை நேரப்பங்கீடு பற்றிய அவசியத்தைப் பெற்றிருப்பது மில்லை. ஆனால் நமக்கு இந்த நேரப் பகிர்வும் அதன்பயன்பாடும் மிகமிக அவசியமானதாகின்றன. ஒருவரது வாழ்க்கையின் சிறப்பும் சிறப்பின்மையும் அவரது நேரப்பயன்பாட்டின் வெளிப்படுத்தல் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். நமது அனுபவத்தினூடாகப் பலரை நாம் அறிந்து கொண்டுள்ளோம். கடந்த காலங்களில் அனாவசிய மாக நேரத்தைச் செலவு செய்தவர்களது தற்போதைய வாழ்க்கைத் தரத்தையும் சிறப்பான முறையில் நேரத்தைப் பயன்படுத்தியவர்களது வாழ்க்கைத்தரத்தையும் மிக இலகுவாக ஒப்பீடு செய்து அதன் வேறுபாட்டை அறிந்து கொள்கிறோம். இங்கே நாம் முக்கியமாக அறிய வேண்டிய விடயம் என்னவெனில் நாம் ஒவ்வொருவரும் நமது தற்போதைய வாழ்வியல் முறையை விட உயர்ந்த ஒரு நிலையை அடையவேண்டுமாயின் முதலில் முக்கிய கவனத்தைச் செலுத்த வேண்டியது நமக்குத் தரப்பட்ட உயர்ந்த கொடையான நேரத்தைதான். அதாவது ஒரு நாளில் உள்ள இருபத்திநான்கு மணித்தியாலங்களின் பங்கீடு பற்றியது தான் முதலில் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

நமது வாழ்க்கையானது வரவு, செலவு, முதலீடு என்ற பிரிவுகளைக் கொண்டது. நமக்குத் தரப்பட்டுள்ள நேரம் கூட இந்தப் பிரிவுகளைக் கொண்டது. எமக்குத்தரப்பட்ட இருபத்திநான்கு மணித்தியாலங்கள் நமக்குரிய வரவாகும். இவ்வாறு நமக்குக் கிடைத்த இந்த நேரத்தை நாமாகப் பயன்படுத்தாவிட்டால் அது தானாகச் செலவழிந்து போய்விடும். நேரத்தின் இன்னுமொரு சிறப்பு என்னவென்றால் அதை நாம் பயன்படுத்தாவிட்டால் இழந்துவிடுகின்றோம். எனவே நாம் இழப்பதை விட பயன்படுத்துவதில் அக்கறை கொள்வது அவசியமாகின்றது.

நேரம் தரப்படுவது மட்டுமே, நாமாக உருவாக்கமுடியாது. தரப்பட்ட நேரத்தை எவ்வாறு பயன்படுத்தல் அவசியம் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நேரமாக இருந்தாலும் சரி, பணமாக இருந்தாலும் சரி செலவு செய்வது மிகவும் இலகுவானது. பணத்தைவிட நேரத்தை மிகச் சுலபமாகச் செலவு செய்யலாம். நாமாகச் செலவு செய்யாவிட்டாலும் அது தானாகவே செலவாகிவிடும். இதனால் தான் நாம் நேரத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நம்மால் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்படாத அல்லது சிறந்த பெறுபேறுகளைத் தராத நேரப்பயன்பாடு என்பது மீட்க முடியாத செலவாகி அமைந்து விடுகின்றது. எனவே நேரம் பற்றிய தெளிவான திட்டமிடல் அவசியமாகும்.

நேரத்தைச் சரியான முறையில் திட்டமிடாதவர்கள் அதன் தவறான பயன்பாட்டினால் மிகவும் நேரப்பற்றாக்குறைக்குள் அகப்பட்டுக்கொள்வதுடன் எந்தவிதமான சிறந்த பெறுபேறுகளையும் பெற முடியாமல் பல்வேறு சிக்கல்களுக்குள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். இவர்கள் இருபத்திநான்கு மணித்தியாலங்களும் ஏதோ ஒன்றைச் செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் அதன் பெறுபேறுகள் மிகவும் குறைவாக இருக்கும். ஏனெனில் ஒழுங்குபடுத்தப்பட்ட நேரப்பங்கீடு என்பது தரமான நேரப்பயன்பாட்டுக்கும் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கும் அத்திவாரமாக அமைகின்றது என்பதை இவர்கள் அறிந்து கொள்வதில்லை.

**KG Master**-*kgmaster@rogers.com*

இப்போது இன்னுமொரு முக்கியமான விடயத்தை நாம் அறிந்து கொள்டோம். பணத்திற்கு வரவு, செலவு, முதலீடு இருப்பது போல் நேரத்துக்கும் வரவு, செலவு, முதலீடு என்பன உண்டு. நமக்குக் கிடைக்கும் வருமானத்தை எவ்வாறு திட்டமிடல் மூலம் எவ்வளவு செலவு செய்யவேண்டும், எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும் என்று நாம் நடைமுறைப்படுத்துகின்றோமோ அவ்வாறே நேரத்தையும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். நமது வருமானம் கூட நமது நேரத்தின் விற்பனையாகும். நாம் நமது நேரத்தை ஒரு தொழிலில் விற்பதன் மூலம் வருமானத்தைப் பெறுகின்றோம். அவ்வாறு பெற்ற வருமானத்தில் செலவு, முதலீடு என்பவற்றை நாம் தீர்மானிக்கின்றோம். ஆனால் நேரமோ நமக்கு இலவசமாகக் கிடைக்கின்றது. அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதே நமது வாழ்க்கைத் தரத்தையும், சிறப்பையும் தீர்மானிப்பதாக அமைகின்றது.

இப்போது நேரத்தின் பங்கீடு பற்றிப் பார்ப்போம். ஒருதரமான வாழ்க்கைமுறைக்கு நமது உடல் நலம் உள்ளடங்கலாக ஒரு நாளில் உள்ள இருபத்திநான்கு மணித்தியாலங்களை எவ்வாறு பகிர்ந்து கொள்வது அவசியமானது என்பதை விளக்குவதற்கு இந்த நேரத்தை மூன்று பகுதிகளாகக் பிரித்தல் வேண்டும். வருமானத்தை உருவாக்குவதற்கான நேரம், ஓய்வுக்கான நேரம், முதலீட்டுக்கான நேரம் என்பனவே அவையாகும். அதாவது நமது உழைப்பின் மூலம் வருமானத்தை உருவாக்குவதற்குப் பத்து மணித்தியாலங்களையும் உறக்கத்திற்கும் - உடல் நலத்திற்கு - உறக்கம் ஆணிவேராக இருப்பதால் எட்டு மணித்தியாலங்களும் அவசியமானவை. இங்கே இந்த இரண்டு நடவடிக்கைகளுக்குமாக நமக்குப் பதினெட்டு மணித்தியாலங்கள் அவசியமாகின்றன. இந்தப் பதினெட்டு மணித்தியாலங்களும் ஒருநாளில் நம்மால் செலவிடப்படுகின்றன.

உண்மையில் நமது வாழ்வின் உயர்வும் சிறப்பும் மிகுதியாகவுள்ள ஆறுமணித்தியாலங்களினால் மட்டுமே தீர்மானிக்கப்படுகின்றன என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளல் வேண்டும். முன்னர் குறிப்பிட்டதைப்போன்று எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகள் வேண்டுமாயின் முதலீடு அவசியமானது. இங்கே நான் குறிப்பிடும் முதலீடு மீதியாகவுள்ள இந்த ஆறு மணித்தியாலங்களின் முதலீடாகும். இந்த முதலீடே அறிவாளர்கள், வெற்றியாளர்கள், சரித்திர நாயகர்கள், முன்னோடி கள், வழிகாட்டிகள், சான்றோர்கள் என்றெல்லாம் நாம் போற்றிப்புகழ்பவர்களை உருவாக்கியது.

இப்போது இந்த ஆறுமணித்தியாலங்களை எவ்வாறு முதலீடு செய்தல் வேண்டும் என்பதைப் பார்ப்போம். இந்த ஆறு மணித்தியாலங்களை இரண்டு மணித்தியாலங்களைக் கொண்ட மூன்று பிரிவுகளாக்குதல் வேண்டும். முதல் இரண்டு மணித்தியாலங்களை நாம் ஒவ்வொருவரும் நமக்காக முதலீடு செய்தல் வேண்டும். இந்த இரண்டு மணித்தியாலங்கள் சிறந்த மனோபாவங் களை வளர்க்கும் புத்தகங்களை வாசிப்பதற்கும், முற்போக்குச் சிந்தனையாளர்களுடன் விடயங்களைக் கலந்துரையாடுவதற்கும் மன அமைதிக்கான தியானம் போன்றவற்றிற்கும் முதலீடு செய்யப்பட வேண்டும். சுருக்கமாகக் கூறுவதாயின் சுயமுன்னேற்றத்திற்கான முதலீடாக அமைதல் வேண்டும்.

அடுத்த இரண்டு மணித்தியாலங்கள் நம்மில் தங்கியிருக்கும் குடும்ப அங்கத்தவர்களது முன்னேற்றத்திற்காக முதலீடு செய்யப்படல் வேண்டும். சிறந்த முறையில் சிறப்பான மனோபாவங்களை வளர்க்கக்கூடிய விடயங்களில் குடும்ப அங்கத்தவர்களுக்காக முதலீடு செய்யப்பட வேண்டும். மகிழ்ச்சிகரமானதும் புரிந்துணர்வும் கொண்ட குடும்ப அமைப்பு என்பது மனித வாழ்வின் அடித்தளமாக அமைவதற்கு இந்தநேரமுதலீடே அவசியமாகின்றது. பொருளாதார ரீதியான வசதிகள் இருந்தும் அன்பும் பண்பும் அணைப்பும் இணைப்பும் இல்லாவிடின் சிறந்த குடும்பம் ஒன்றை நகர்த்துவது குதிரைக் கொம்பாகிவிடும். எனவே இரண்டுமணித்தியாலங்கள் குடும்பத்தின் உயர்வுக்காக முதலீடு செய்யப்படல்வேண்டும்.

மிகுதியாகவுள்ள இரண்டு மணித்தியாலங்கள் சமூக நலன் சார்ந்த விடயங்களில் முதலீடு செய்யப்படல் வேண்டும். தான் வாழும் சமூகத்தின் ஆணிவேராக ஒவ்வொரு தனிமனிதனும் அமைவதனால் சமூகத்தின் உயர்வுக்கும் சிறப்புக்கும் இந்த இரண்டு மணித்தியாலங்கள் முதலீடு செய்யப்படல் வேண்டும். ஒவ்வொருவரும் தனது இயல்புக்கேற்ற அளவு இந்த முதலீட்டை செய்தல் வேண்டும். அப்போது சமூகமும் உயர உயர நாமும் உயர்வடைவோம்.

ஆம் வாசகர்களே!

ஒருநாளில் உள்ள இருபத்திநான்கு மணித்தியாலங்களில் கால்பங்கான ஆறுமணித்தி யாலங்களின் பயன்பாடே மனிதனது சிறப்பானதும் உயர்வானதும் தனதும் தான் சார்ந்த குடும்பம், சமுதாயம் என்பவற்றின் சிறப்பிற்கும் உயர்வுக்குமான பங்களிப்பாக அமைகின்றது. இந்த ஆறுமணித்தியாலங்களின் முதலீடு எந்த வித பிரதிபலனும் எதிர்பாராத முதலீடாகும். நேர்மையும் தூய்மையும் கொண்ட எந்த நடவடிக்கையும் நமது கற்பனைக்கும் அப்பாற்பட்ட சிறப்பையும் உயர்வையும் தருகின்றது. எனவே இந்த ஆறு மணித்தியாலங்களை நமக்கும் நமது குடும்பத்துக்கும், நமது சமுதாயத்துக்கும் உயர்வும் சிறப்பும் தருவதாக அமையக்கூடிய வகையில் முதலீடு செய்வோமாக!

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹராஜியின் உரைகள்**

| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3223 | Saturdays at 10:30 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

# மாணவர் உடல் ஆரோக்கியத்திற்கும் மன ஆற்றலுக்கும் யோகாசனத்தின் முக்கியத்துவம்




இன்றைய குழந்தைகள் தான் நாளைய சமூகத்தின் முதுகெலும்பாகவும் நாட்டையே வழிநடத்திச் செல்லும் முறையில் தூண்களாகவும் தமது பெற்றோர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்கப் போகின்றனர் என்பது யாவரும் அறிந்ததே. எனவே நமது குழந்தைப் பருவத்தினரை அதாவது மாணவர் சமூகத்தினரை மிகுந்த உடல் ஆரோக்கியமுள்ளவர்களாகவும் நிறைந்த மன ஆற்றலுள்ளவர்களாகவும் உருவாக்குவது பெற்றோர்களின் முன்னாலுள்ள பொறுப்பாகும்.

ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர் என்பதில் ஐயமில்லை. அத்துடன் அதற்கு இணையாக சங்கீதக்கலையையோ உடலை உறுதியாக்கும் கராத்தே போன்ற உடற்பயிற்சியையோ அல்லது பரதநாட்டியம் போன்ற கலைகளையோ கற்பிக்கின்றனர். ஆனால் இவ்வாறான கலைகள் எல்லாம் ஒரு சில வருடங்களில் அந்த குழந்தைகளுக்கு எந்த விதத்திலும் வாழ்க்கைக்கு பயன்தரப்போவதில்லை. இதனை சற்று சிந்தித்துப் பார்த்தால் புரியக்கூடும்.

## மன ஆற்றலும் மூளை விருத்தியும்

மூளையும் மனமும் வேறுபட்டவை. மனநிலை பாதிக்கப்படும்போது மூளை தனது தொழில்பாட்டினை சரிவரச்செய்ய இயலாது. புத்திக்கூர்மை என்பது குறைவாக இருக்கும். எதிலும் அசமந்த போக்கு காணப்படும். உறுதியான இலட்சியத்தை உருவாக்க முடியாது. எனவே மூளையும் மனமும் ஒன்றாக இணைந்து செயல்படவேண்டும். இதுதான் மாணவர்களின் வெற்றியின் திறவுகோல். இந்த நிலை ஏற்படும்போது மன ஆற்றல் பெருகும். மூளை தெளிவடையும் ஞாபக சக்தி அதிகரிக்கும்.

## உடல் ஆரோக்கியமும் மகிழ்ச்சியும்

பெரும்பாலான பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு சத்தான உணவுகளையும் முத்தான நொறுக்கு தின்பண்டங்களையும் ஊட்டுகின்றபோதும் பல குழந்தைகள் எலும்பும் தோலுமாக காட்சியளிக்கின்றனர். உண்ணும் உணவு உடலில் சேருவதில்லை. ஆனால் இன்னும் பலர் வயிற்றுப் பகுதி பருமலாகி இளம் வயதிலேயே குண்டுத் தோற்றத்தை அடைகின்றனர்.

இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு காரணம் அவர்களது ஜீரண கருவிகள் அதாவது சமிபாட்டு உறுப்புகள் நன்கு வேலை செய்வதில்லை என்பது தான் முக்கிய காரணம். இன்னும் சில குழந்தைகள் மந்தமான புத்தியுள்ளவர்களாகவும் சோம்பல் உள்ளவர்களாகவும் இன்னும் சிலர் அளவுக்கு மிஞ்சிய துடிப்புடனும் அடங்காத துடுக்குத்தனமுள்ளவர்களாகவும் காணப்படுவர். இவற்றையெல்லாம் உடல் ஆரோக்கியமென்றோ உறுதியென்றோ சொல்லமுடியாது.

ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகாட்டும் யோகாசனங்கள்:



குழந்தைகளான மாணவ செல்வங்களுக்கு முறையான யோகாசனப் பயிற்சிகளைப் பயிற்றுவிக்கும் போது அவர்களின் மனதிலும் தோற்றத்திலும் ஏற்படுத்தும் மாற்றத்தினை சில நாட்களிலேயே கண்கூடாகக் காணமுடிகிறது. அது மட்டுமன்றி சீரான பழக்கவழக்கங்களும் தானாக உருவாவதை அவதானிக்கக் கூடியதாயிருக்கும்.

**யோகாசனப் பயிற்சியினால் மாணவர்களுக்கு உண்டாகும் நன்மைகள்**

1. இரத்த ஓட்டம் உடலின் அனைத்து பகுதிகளுக்கும் சீராக பரவுகிறது.
2. சோம்பல் ஒழிகிறது. உடல்வலிகள் மறைகிறது.
3. மூளை தெளிவடைகிறது.
4. சுவாசப்பைகள் (Lungs) நன்கு விரிந்து சுருங்கி இயங்குவதால் ஆஸ்துமா (Ashma) மூச்சுத் திணறல் போன்றவை உடலிலிருந்து மறைகிறது.
5. பந்துக்கிண்ண மூட்டுகள் அனைத்தும் நன்கு சுரந்து இயங்குவதால் உடல் உறுதியாகி விளையாட்டுகளிலும் வெற்றி பெற முடிகிறது.
6. மலச்சிக்கல் நீங்குகிறது.
7. ஜீரண உறுப்புகள் நன்கு இயங்குவதால் உணவு நன்கு சமிபாடாகி தேவையான சத்துகள் உடலுக்கு சென்று கிடைக்கிறது.
8. தைராய்டு சுரப்பி (Tiroid Glands) நன்கு இயங்குவதால் உடலின் சமநிலை சீராவதுடன் சிறந்த பேச்சாற்றல் உருவாகிறது.
9. உடலில் அழகும், முகத்தில் பொலிவும் உண்டாகின்றது.
10. சிறப்பான இலட்சியத்தை உருவாக்கி எதையும் சாதிக்கவல்ல தன்னம்பிக்கையை வளர்க்கிறது.

இந்த யோகாசன கலை ஒன்று தான் குழந்தைகளின் வாழ்நாள் முழுவதும் அவர்களுடன் கூடவருவதுடன் முதுமையிலும் இளமைத் தோற்றத்துடன் வாழவும், மரணத்தை தள்ளிப்போடவும் வழிகாட்டுகிறது.




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm





HOMELIFE/GTA Realty Inc., Brokerage*

Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Direct: 416-451-0271
Email:seelansiva@gmail.com
Web:www.sivahomes.com

HOMELIFE HIGHER STANDARDS

Uthayan Aiyadurai
Sales Representaive
Direct: 416-999-3555
Email:aiya14@gmail.com



"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"

IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM ME

HERE IS YOUR CHANCE TO WIN




$49,900

Markham/Eglinton
Nicely Setup Take Out/ Restaurant In Busy Location, All Chattels, Equipment In Good Condition, Monthly Rental $1990 Plus Utilities For First Year

For Sale or Rent
Market East

Markam/Steels
Very good neighborhood
Open Any Business
Affordable Rent
Lots of parking

$354,900

CLOSE TO SCHOOL
Bovaird/Hwy 7
Well Maintained, Full Brick 4 Br Detached, Lovely Open Concept Minute Walk To Catholic And Public Schools, Good Location

$149,900

CLOSE TO U of T
Morningside/Ellesmere
Very Good Location
2 Bedrooms, Luxury Mapledale Condo, Bright And Spacious Corner Unit, Close To All Amenities

$135,000

Neilson/Mclevin
2 Bedroom Condominium corner Unit, 24 Hr Security
One Parking Space , Good Location

For Sale or Rent


Middlefield/Finch
Very good neighborhood
Open Any Business
Affordable Rent
Lots of parking

$269,900

Kennedy/Dennsion
Well Maintained New Condo
2 +1 Bedroom Condominium
2 full Washrooms,Beautiful Lay Out
Parking Spaces , Good Location,
All Brand New appliances

1711 McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3
Bus:(416)321-6969
This is not intended to solicit properties currently listed for sale.
*Independently Owned and Operated
*Some Conditions Apply

# "எம். ஜி. ஆரும் இந்திராகாந்தியும் இருந்திருந்தால் தமிழ் ஈழம் மலர்ந்திருக்கும்"

## நேர்காணல் - கவிஞர் முத்துலிங்கம்

"எம்.ஜிஆர். சீக்கிரம் மறைந்துவிட்டாரே என்ற கவலை முன்பு எப்பொழுதும் இல்லாத அளவுக்கு இப்பொழுது அடிக்கடி எனக்கு தோன்றிக் கொண்டே இருக்கிறது. அவர் இருந்திருந்தால் இன்று ஈழத்தில் நிகழ்ந்து வரும் துயரச் சம்பவங்கள் நடந்திருக்காது. மீறி நடந்தால், இன்று ஆட்சிக் கட்டிலில் இருப்பவர்கள் செய்வதுபோல் பார்த்துக் கொண்டிருக்கவும் மாட்டார். மேலும் கொஞ்ச நாட்கள் அவரது வாழ்நாளை நீடித்திருந்தால், தனித் தமிழ் ஈழம் மலர வழி செய்துவிட்டு போயிருப்பார். தமிழகமும் ஈழமும் அவர் மறைவால் இழந்தவைகள் அனேகம்." பழைய நினைவுகளில் மூழ்கியபடியே, ஆழ்ந்து யோசித்து, நிதானமாக பேசுகிறார் கவிஞர் முத்துலிங்கம்.

தமிழ் திரைப்பட பாடல்கள் வரலாற்றில் கவிஞர் வாலிக்கு இணையான ஒரு சரித்திர சாதனையாள ராக மதிக்கப்படுபவர் கவிஞர் முத்துலிங்கம். கண்ணதாசன் காலம் தொடங்கி இன்றைய நா. முத்துக்குமார், யுகபாரதி, பா. விஜய் போன்ற இன்றைய இளம் கவிஞர்கள் வரைக்கும் முன்னணி பாடலாசிரியராக தொடர்ந்து இயங்கி கொண்டிருப்பவர். 1500க்கும் மேற்பட்ட பாடல்கள் எழுதியவர். சிறந்த பாடலாசிரியர் என்பதுடன் நல்ல சிந்தனையாளர், சிறந்த பேச்சாளர், எம்.ஜி. ஆருக்கு மிக நெருக்கமானவர் என்ற தனிச்சிறப்புகளும் முத்துலிங்கத்துக்கு உண்டு. முத்துலிங்கம் மேல் தனி மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த எம். ஜி. ஆர்., அவரை தன் ஆட்சியில் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் அரசவை கவிஞராகவும் வைத்து அழகு பார்த்தார். முத்துலிங்கத்தின் இலக்கியச் சொற்பொழிவுகளை தொகுக்கப்பட்டு "காற்றில் விதைத்த கருத்து" என்னும் பெயரில் புத்தகமாக வெளிவந்துள்ளது. இதற்கு, ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள தினத்தந்தி ஆதித்தனார் நினைவு பரிசு கிடைத்துள்ளது. இது தவிர சிறந்த திரைப்பட பாடலாசிரியருக்கான விருது, பாவேந்தர் விருது, கலைமாமணி விருது, கலைத்துறை வித்தகர் விருது ஆகிய தமிழக அரசின் விருதுகள் உள்பட பல்வேறு விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

சென்னை, தியாகராய நகரில் இருக்கும் ஓவியக் கவிஞர் அமுதபாரதி அலுவலகத்தில் "விளம்பரம்" இதழுக்காக முத்துலிங்கத்தை சந்தித்தோம்.

கேள்வி: உங்களுக்கும் எம்.ஜி. ஆருக்குமான நட்பில் இருந்தே இந்த நேர்காணலைத் தொடங்குவோம். அதுதான் பொருத்தமாக இருக்கும்.

முத்துலிங்கம்: (சிரிக்கிறார்) என் தேருக்கான சக்கரங்களை வலுவுள்ள தாக்கி, நான் சென்று கொண்டிருந்த ஒற்றையடிப் பாதையை ராஜபாட்டையாக மாற்றிக் கொடுத்தவர், பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். கதை, வசனகர்த்தாவான பாலமுருகனும் இயக்குனர் மாதவனும்தான் என்னைத் திரைப்படத்துறைக்கு அறிமுகப்படுத்தினர். அதன் பிறகு, எம்.ஜி. ஆருடன் ஏற்பட்ட பழக்கமும் நெருக்கமும்தான் அத்துறையில் நான் இந்த அளவுக்கு வளர காரணமாக இருந்தது. விறகுக் கட்டையாக கிடந்த என்னை போன்றவர்கள் பலரை வீணையாக்கிக் காட்டிய பெருமை எம்.ஜி.ஆருக்கு உண்டு. பாலைவனத்திலும் சோலைவனத்தின் சொகுசுகளை உண்டாக்கி காட்டும் வல்லமை அவர் ஒருவருக்குத்தான் இருந்தது.

கேள்வி: எம்.ஜி. ஆருடன் இருந்த தமிழ் உணர்வாளர்களில் நீங்களும் ஒருவர். அவரது கொள்கைத் திட்டங்கள் உருவாக்கத்தில் உங்கள் பங்களிப்புகளும் உண்டு. இலங்கை தமிழர் விடுதலைப்போரில் விடுதலைப்புலிகள் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தவர் எம்.ஜி. ஆர். அதனடிப்படையில் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தார். இப்பொழுது புலிகள் ஒரு நெருக்கடியைச் சந்தித்துள்ளார்கள். இதற்கு என்ன காரணம்?

முத்துலிங்கம்: எதைச் சொல்லச்சொல்கிறீர்கள். இப்பொழுது தமிழகத்தில் உண்மையைச் சொன்னால்தான் உடனே கைது என்கிறார்களே. ராஜீவ்காந்தி படுகொலை காரணமாக இந்தியா வில் புலிகள் பற்றி பேசினாலே தேசவிரோதம் என்று ஆகிவிட்டது. ராஜீவ்காந்தி அனுப்பிய அமைதிப்படையால் இலங்கையில பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. ராஜீவ்காந்தி பெரிய தலைவர்தான். அவரது மறைவு நம் எல்லோருக்கும் பேரிழப்புதான். என்றாலும்கூட, அவர் ஒருவரது கொலைக்காக லட்சக்கணக்கான அப்பாவி தமிழர்கள் இலங்கை ராணுவத்தால் கொல்லப்படுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமா என்று மனித நேயத்துடன் சிந்தித்துப் பார்க்க தமிழக காங்கிரஸ் கட்சி தவறிவிட்டது. ஏற்கெனவே காங்கிரசிடம் மொழி உணர்வும் இன உணர்வும் கிடையாது என்பது எல்லோருக்கும் தெரியும். இப்போது மனித நேயமும் இல்லாத கட்சியாக காங்கிரஸ் ஆகிவிட்டது. ஆகவே, தமிழ்நாட்டில் காங்கிரசை வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கி எறியவேண்டும். வரும் தேர்தலில் தமிழர்கள் அதைச் செய்வார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

இலங்கையில் தமிழர்கள் தங்கள் விடுதலைப் போராட்டத்தை அமைதியான முறையில்தான் தொடங்கினார்கள். நாங்கள் வெற்றி பெற்றால் தனி ஈழம் அமைப்போம் என்று 1978இல் தேர்தல் பிரகடனமாக சொல்லி இலங்கையில் தமிழர்கள் போட்டியிட்டார்கள். அப்போது 19 இடங்களில் போட்டியிட்டு, 18 இடங்களை கைப்பற்றினார்கள். அதற்குப் பிறகும் சிங்கள அரசால் உரிமைகளும் சலுகைகளும் பறிக்கப்படுவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. தமிழர்கள் கொல்லப்படு வது அதிகரித்தது. தமிழ் இனத்தையே சிங்கள ஆட்சியாளர்கள் அழிக்க நினைத்தப்போதுதான் ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதை, தமிழகத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக பேசி வருபவர்கள் உணரவேண்டும்.

